விலை ரூபா: 10.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 16 திங்கட்கிழமை (28.04.2008) தொலைபேசி 222 [illegible]378, 222 7829 ஒலி 131




# உள்ளூரில் தயாரித்த இருவகைக் குண்டுகளை புலிகள் முகமாலையில் பயன்படுத்தி உள்ளனர்

## இக்பால் அத்தாஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

முகமாலைச் சமரில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரு வகையான குண்டுகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தியதாக படைத்துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளிவந்த சண்டே ரைம்ஸ் ஆங்கில வார ஏட்டில் பாதுகாப்புத் தொடர்பிலான பத்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற முகமாலை சமரில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சமாதானம் மற்றும் இராகவன் என்ற இருவகையான குண்டுகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தியுள்ளனர்.

இதில் விடுதலைப் புலிகளால் ஏவப்பட்ட சமாதானம் என்ற குண்டில் பொஸ்பரசு பதார்த்தம் கலக்கப்பட்டிருந்ததாக தகவல் தெரிவிக்கின்ற போதும் சுயாதீனமாக இதனை உறுதி செய்ய முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சண்டே ரைம்ஸ் வார ஏட்டிற்கு இக்பால் அத்தாஸ் எழுதிய பத்தியில் இடம்பெற்றுள்ள முக்கிய பகுதிகள் வருமாறு,

முகமாலை களமுனை இலங்கைப் படையினரின் கொல்களமாக மாற்றமடைந்துள்ளது. மகிந்தவின் காலப்பகுதியில் இக் களமுனையில் இரு சமர்கள் மிகவும் உக்கிரமாக நடைபெற்றன.

இதில் பெருமளவிலான படையினர் உயிர்களையும் தமது உடல் உறுப்புக்களையும் இழந்திருந்தனர்.

2006ஆம் (02 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ நிலைகள் மீது புலிகளின் விமானங்கள் மணலாற்றில் தாக்குதல்

(கொழும்பு)

வெலிஓயா, மணலாறு இராணுவ முன்னரங்கப் பகுதிகள்மீது விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் குண்டுத் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## ஈரான் ஜனாதிபதி இன்று இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

ஈரான் ஜனாதிபதி மஹ்மூத் அகமட் நிஜாத் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

ஆசியச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள அவர் இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியாவிற்கும் செல்லவிருக்கின்றார். நாட்டில் தங்கியிருக்கின்ற காலத்தில் அரசியல் முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றார்.

ஈரான் நாட்டின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள உமா ஓயா நீர்மின் திட்டத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து நாளை செவ்வாய்க்கிழமை அவர் ஆரம்பித்து வைப்பார்.

ஜனாதிபதி (10 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் பல மணிநேரம் படையினர்–புலிகள் மோதல்

(கொழும்பு)

மணலாறு ஜானகபுரம் வடக்கு, சிங்கபுரம் மற்றும் கல்குளம் பகுதிகளில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பலமணிநேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்த மோதல்களில் 7 இராணுவத்தினர் பலியானதுடன் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த மோதல்களின்போது 22 புலிகள் கொல்லப்பட்டதுடன் 29 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்கவில் தேடுதல் 17 தமிழர்கள் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்டிய பிரதேசங்களில் பொலிஸாரும் படையினரும் இணைந்து நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதலின்போது 17 தமிழர்கள் உட்பட 28 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணிமுதல் நேற்று மாலைவரை மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே (10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுமாதா ஆலயத்தின் புனிதத் தன்மையினை புலிகளும் இராணுவத்தினரும் மதித்துள்ளனர்

### நேரில் சென்ற குரு முதல்வர் கூறுகிறார்

(கொழும்பு)

மடு ஆலயத்தில் இருந்து பரிபாலகர்கள் வெளியேறிய பின்னர் ஆலய வளாகத்தை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த புலிகளும், படையினரும் ஆலய புனிதத் தன்மைகளை மதித்துள்ளனர் என்று மடு ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று திரும்பியுள்ள மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அந்தோனி விக்டர் சோசை தெரிவித்தார்.

மடு அன்னையின் பிரதான ஆலயத்திற்கு இடது பக்கமாக அமைந்துள்ள திரு இருதய ஆலயம் முற்றாக சேதம் அடைந்துள்ளதுடன் குருக்கள் வசிக்கும் இடமும் சேதமாகியுள்ளது அத்துடன் மடு (10ஆம் பக்கம் பார்க்க)

## மடுவை பொறுப்பேற்பது குறித்து இன்று தீர்மானம்

(கொழும்பு)

மடுமாதா ஆலயத்தின் நிர்வாகத்தை ஏற்குமாறு இராணுவம் தங்களுக்கு கோரிக்கை விடுத்திருந்த போதிலும் இது குறித்து இன்று நடைபெறவுள்ள குருமார்களின் ஆலோசனைக் கூட்டத்தில்தான் முடிபெடுக்கப்படுமென மன்னார் மாவட்ட ஆயர்இராஜப்பு ஜோசப் கூறியுள்ளார்.

அத்தோடு (10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ இரகசியங்களை பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது -ஐ.தே.க

(கொழும்பு)

வடக்கில் யுத்தத்தை முன்னெடுக்கும் அரசாங்கத்திடம் தென்பகுதியில் மக்களைப் பாதுகாப்பதற்கான எத்தகைய திட்டமும் கிடையாது. அரசாங்கம் இராணுவ இரகசியங்களை பாதுகாப்பதற்கு தவறியதன் காரணமாகவே முகமாலையில் எமது படையினரின் பல உயிர்கள் பலியாகியுள்ளன என்று ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். முகமாலைச் சமரில் காணாமல் போன இராணுவத்தினரில் பலர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர்.

இவர்கள் தமது பெற்றோர், உறவினர்களுடன் தொலைபேசியில் பேசியுள்ளனர் என்றும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியை இரண்டாக பிளவுபடுத்தியது ஜனாதிபதியும் அவரின் சகோதரருமே!

### சோமவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜே.வி.பியின் உள் விவகாரங்களைத் தீர்ப்பதற்கு தன்னால் அனுசரணையாளராக செயற்பட முடியும் என்று தொலைபேசி ஊடாக ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததையடுத்து இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக கொழும்பு வாரஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)





வேலணைப் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் மங்கள விளக்கேற்றுவதையும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.துரைசிங்கம்,வேலணை பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன்,அரச அதிபர் ஆகியோரையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# உள்ளூரில் தயாரித்த இருவகைக் குண்டுகளை...

ஆண்டும் ஒக்ரோபர் மாதமும் கடந்த வருடம் நவம்பர் மாதமும் இம் மோ தல்கள் நடைபெற்றிருந்தன.

கடந்த மாதம் இப்பகுதிக்கு சென்றிருந்த ஊடகவியலாளர்களிடம் இராணுவம் தென் முனையில் மேலும் ஒரு களமுனையை திறக்க உள்ளதாக அதிகாரிகள் தெரிவித் திருந்தனர்.

ஆனால் கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள், படையினரின் நிலைகளை தாக்கிய தாகவும் இம் மோதல்களில் 43 படையினர் கொல்லப்பட்டதாகவும் 33பேர் காணாமல் போய் உள்ளதாகவும் 126 பேர் காயமடைந் ததாகவும் பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த வெள்ளிக்கிழமை தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களை இரா ணுவத் தலைமையகத்திற்கு அழைத்த இரா ணுவத் தளபதி சரத்பொன்சேகா, 47 இராணு வத்தினர் கொல்லப்பட்டதாகவும் 33 பேர் காணாமல்போய்விட்டதாகவும் 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இராணுவம் 600மீற்றர் தூரம் முன் னேறி உள்ளதாகவும் தெரிவித்திருந்தார். அவரது தகவல்களின்படி விடுதலைப் புலி களின் பாதுகாப்பு அரண்களிலிருந்து 100 மீற்றர் தொலைவிலேயே இராணுவம் தற் போது நிலைகொண்டிருக்க வேண்டும். படையினரின் தகவல்களின்படி விடுதலைப் புலிகள் வலிந்த தாக்குதலை நடத்தியிருந் தால் அது தொடர்பில் பல கேள்விகள் எழ வாய்ப்புள்ளது. முதலாவதாக 16நாட்க ளுக்கு முன்னர் மிகவும் பலப்படுத்தப்பட்ட பாது காப்பு அரண்கள் என படை அதிகாரிகளால் ஊடகவியலாளர்களுக்கு காட்டப்பட்ட பகுதி கள் மீது எவ்வாறு விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதலை நடத்தியுள்ளனர்? இத்தாக்கு தலில் 47 படையினர் கொல்லப்பட்டிருந் தால் அது அந் நிலைகளின் பலவீனத்தை யே காட்டும். இதனிடையே 800விடுதலைப் புலிகள் கடந்த வாரம் முகமாலை களமுனைக்கு நகர்த்தப்பட்டிருந்ததாக படையினரின் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எனினும், இம்மோதல் தொடர்பான தக வல்களை வடபோர் முனையில் உள்ள இராணுவத்தினர், இராணுவ அதிகாரிகள் மற்றும் இராணுவத் தலைமையகத்தில் உள்ள இராணுவ அதிகாரிகளிடமிருந்து நாம் பெற்றுள்ளோம். அதிகாலை 2.30 மணியளவில் இராணுவத்தின் 53 மற்றும் 55 ஆவது படையணிகள் முன்னகர்வைத் தொடங்கின.

. 53ஆவது படையணியை அதன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சமந்த சூரிய பண்டார வழி நடத்தினார். 55 ஆவது படை யணியை பிரிகேடியர் கமல் குணரட்ண வழி நடத்தியிருந்தார். 5ஆயிரம் படையினர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். விடு தலைப் புலிகள் முதலில் தமது முன்னணி அரணிலிருந்து பின்வாங்கியிருந்தனர். படையினர் அதனை அடைந்தபோது அவர் களுக்கு அதிர்ச்சிகள் காத்திருந்தன. கடும் சமர் மூண்டது.பின்னர் படையினர் தமது நிலைகளுக்கு திரும்பியிருந்தனர். விடு தலைப்புலிகள் சமாதானம் மற்றும் ராகவன் ஆகிய இருவகையான புதிய எறிகணை களை பயன்படுத்தியிருந்தனர். இதில் ஒரு எறிகணையிலிருந்து பொஸ்பரஸ் துகள்கள் இருந்ததாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள் ளது. எனினும் அதனை உறுதிப்படுத்த முடிய வில்லை. இம் மோதல்களில் நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ள துடன், 348 பேர் காயமடைந்துள்ளனர். 121 பேர் ஜெயவர்த்தனபுர மருத்துவமனையிலும் 10பேர் கண்மருத்துவமனையிலும் 35பேர் தேசிய மருத்துவமனையிலும், 40பேர் கொ ழும்பு இராணுவ மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், கிளிநொச்சியிலிருந்து கிடைத்த தகவல்களின்படி பல படையினர் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் 3ஆயிர த்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலி களைக் கொன்றுவிட்டதாக அரசு தெரிவித்திருந்தது. அதற்கு 6மோதத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகளின் பலம் 3ஆயிரம் பேர் என இராணு வத்தளபதி தெரிவித்திருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் போரில் முதலில் மரணத்தைத் தழுவுவது உண்மைதான் என்பது நாளாந்தம் நிரூபண மாகி வருகிறது. இதன்பின்னர் கடந்த வெள் ளிக்கிழமை 53ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சமந்தா சூரிய பண்டார அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள் ளார். தற்போது அவர் அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். 53 படையணியின் கட்டளை அதிகாரியாக 55 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரி கேடியர் கமல் குணரட்ண நியமிக்கப்பட்டுள் ளார். அவரது இடத்துக்கு பிரிகேடியர் பிரசன் னா சில்வா நியமிக்கப்பட்டுள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




## அமரர் சிவகாமி செந்தியா வெற்றித் தொடர் -01


### பரிசு பெறும் மாணவர் விபரம்

**சிறப்புப் பரிசு பெறுவோர்**

1ஆம் இடம்:-பொ.துஷாத் (டால்ற்றன்- துன்னாலை)
2ஆம் இடம்:-சி.சகிஷ்னா (டால்ற்றன் -துன்னாலை)
3ஆம் இடம்:-பு.கபில்ராஜ் (டால்ற்றன்-துன்னாலை)

**சாதாரண பரிசு பெறுவோர்**

பொ.துஷாத்- (டால்ற்றன் -துன்னாலை)
சி.தர்சினி (நியூட்டன்-கரவெட்டி)
க.மதுமதி -உதயதாரகை -கொற்றாவத்தை)
எம்.கபில்ராஜ் (அறிவகம் -அச்சுவேலி)
த.நிரோஜன் (குருபரன்- புத்தூர்)
க.நதீனா (பிறைற்றன் -யாழ்ப்பாணம்)
சி.வாசுகி (அஸ்ரன்-ஆனைக்கோட்டை)



வெளியீடு:புதியநிலா வெளியீட்டுக்கழகம் -கரவெட்டி
குறிப்பு:-வெற்றித் தொடர்:-02 இன் பரீட்சை முடிவுகள் மிக விரைவில் வெளியாகும். (சி.1120)


# பாடசாலை சிறார்களுக்கு பசுப் பால்

கால்நடை வைத்திய அதிகாரி சி. வசீகரனின் உதவியுடன் பாடசாலைச் சிறார்களுக்கு பசுப்பால் வழங்க பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் ஒரு இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத் திட்டத்தின் அடிப்படையில் நாளை சித்தி விநாயகர் பாடசாலையில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் 100 சிறார்களுக்கும், 30 ஆம் திகதி புதன் கிழமை கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் 100சிறார்களுக்கும் பசுப்பால் வழங்குவார்கள்.

இந்நிகழ்ச்சி வாரத்தில் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

*செயலாளர்*
*ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்*
(சி.1074)

# வடமராட்சிப் பொலிஸ் பிரிவுகளில் நடமாடும் செயலகச் சேவை

(பருத்தித்துறை)

வடமராட்சியில் மூன்று பொலிஸ் பிரிவு களிலும் பொலிசார் நடமாடும் செயலக சேவைகளை நடாத்தினர். இந்நடமாடும் செயலக சேவைகளிலே பொலிஸ் விடுகைப் பத்திரங்களுக்கான சான்றிதழ்கள் அனுப் பப்படுதல், பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதிகள் வழங்கல், சிறுபிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல், அடையாள அட்டைகள் பற்றிய பிரச்சினைகள், திருமணப்பதிவின்றி குடும்பம் நடத்துவோர்களுக்குத் திருமணப் பதிவுகள் மேற்கொள்ளல் போன்ற சேவைகள் வழங் கப்பட்டன.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கான நடமாடும் செயலக சேவை, அல்வாய் சிறிலங் கா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பருத்தித் துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் ஆர்.பீ.எஸ்.பண்டார இந் நட மாடும் செயலக சேவையை ஆரம்பித்தார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கான நடமாடும் சேவை வல்வெட்டித்துறை நகராட்சி மன்றக் கட்டடத்தில் இடம் பெற்றது. வல் வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி டபிள்யூ. சுமித்நிஷங்க நடமாடும் செயலக சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கான நட மாடும் சேவை, கரவெட்டி கலிகைக் கந்த சுவாமி ஆலய அருகாமையில் உள்ள கலா சார மண்டபத்தில் நடைபெற்றது. நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம். ஜே.ஹேரத் இந் நடமாடும் செயலக சேவை யை ஆரம்பித்து வைத்தார்.

பொதுமக்களுக்கான நடமாடும் செயலக சேவைகள் யாவும் பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.கே.லியன கேயின் கண்காணிப்பில் நடைபெற்றன. (ஓ)

# சிவராமின் நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

(கொழும்பு)

தராக்கி என அழைக்கப்பட்ட ஊடகவிய லாளர் டி.சிவராமின் மூன்றாவது நினைவு



தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

இவர் 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இரவு கடத்தப்பட்டு மறுநாள் காலை நாடாளுமன்றத்தை அண்மித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

15வருடங்களாக சிங்கள ஊடகத் துறை யினருடன் மிகவும் அன்னியோன்யமாக பழகிய இவர், ஆங்கிலத்திலும் தமிழிலும் எழு திய ஆய்வுக் கட்டுரைகள் அனைவரதும் பாராட்டை பெற்றிருந்தன.

தமிழர்களின் பிரச்சினைகள் பலவற்றை பெரும்பான்மையினத்தவர் அறிந்து கொள் வதற்கு இவரது கட்டுரைகள் பக்கபலமாக இருந்தன.

தனது இறுதிக் காலத்தில் இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் பல முக்கியத்துவம் மிக்க தாக பார்க்கப்பட்டன.

இவர் படுகொலை செய்யப்பட்டு மூன் றாண்டுகள் கடந்த போதும் இதுவரை கொலையாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத் தப்பட்டு விசாரணைகள் மேற்கொள் ளப்படாமை துரதிஷ்டவசமே. (அ-5)

## இன்று ஒரு தகவல்

# நிதானம் தவறலாமா?

அந்தக் காலத்தில் குருகுலவாசம் செய்து படிக்க வேண்டும். ஆச்சிரமத்தில் குருவுக்கு தொண்டு செய்யவேண்டும். துணிகளைத் துவைத்துலர்த்த வேண்டும். குரு தூங்கும் போது அவர் காலைப் பிடித்துவிட வேண்டும். அவ்வப்பொழுது அவர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண் டும். குரு சொல்லிக் கொடுக்கும் பாடங்களை மாணவர்கள் ஓலைச் சுவடிகளில் எழுதிக் கொள்வார்கள். குருகுலவாசம் என்பது மனதையும் பண்படுத்தும். அறிவையும் பண்படுத்தும். அப்படி ஒரு பயிற்சி அது.

அந்தக் காலத்திலே பஞ்சபாண்டவர்கள் ஒரு குருகுலத்தில் கல்வி கற்றார்கள். அவர்களோடு சேர்த்து 120 பேர் அங்கு இருந்தார்கள். இரண்டு ஆண்டுகளின் பின் அவர்கள் குருகுல வாசத்தை முடித்துக்கொண்டு தத்தமது ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்தது. குரு ஒவ்வொருவராகக் கூப்பிட்டு "இதுவரை என்ன கற்றுக்கொண்டாய்?" எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து தான் கற்றுக் கொண்டவை பற்றிக் குருவிடம் தெரிவித்தார்கள். அவர்கள் எல்லாரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். புத்திசாலிகள். எனவே , குரு அவர்களிடம் அபாரமான கல்வி அறிவை எதிர் பார்த்தார்.

ஒருவன் தான் எழுதிவைத்திருந்த சரித்திர பாடம் பற்றிக் கூறினான். இன்னொருவன் இதிகாசம் பற்றிக் கூறினான். மற்றொருவன் ஆயகலைகள் அறுபத்து நான்கைப் பற்றிக் கூறினான். கடைசியா க தருமருடைய முறைவந்தது. குரு முன் சென்றார். வணங்கினார். கையிலிருந்த ஓலைச்சுவடியைப் பிரிக்காமல் அப்படியே நின்றார். " நீ படித்தது என்ன? ஓலைச் சுவடியைப் பிரித்துப் படி" என்றார் குரு. தருமர் அசையவேயில்லை. பின் மெதுவாகச் சொன்னார். " குருவே! நான் கற்றுக்கொண்டது ஒன்றே ஒன்றுதான். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கிய பாடமாக அமையும்." " என்னிடம் இரண்டு வருடம் கற்ற நீ , கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்று தானா?" எனக் குரு கோபத்துடன் கேட்டார்.

மற்றைய மாணவர்களை விட தருமரே பண்பில் சிறந்தவர். அறிவில் உயர்ந்தவர். வயதில் முதிர்ந்தவர். அவரே இப்படிச் செய்தால் மற்ற மாணவர்களும் கெட்டுப் போய்விடுவார்களே எனக் குரு கவலைப்பட்டார். " தருமா! நன்றாக யோசனை செய்து பதில் சொல். இரண்டு ஆண்டு காலமாக நீ கற்றுக்கொண்டது என்ன? " குரு கோபமாகக் கேட்டார். " இரண்டு வருட காலமாக நான் கற்றுக்கொண்ட முக்கிய பாடம் ஒன்றே ஒன்று தான் " என்றார் தருமர் சாந்தமாக. குருவின் கோபம் அதிகமானது.

"உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னை விட வயதிலே குறைந்தவர்கள். அவர்கள் தாங்கள் படித்ததை எவ்வளவு விரிவாகப் படித்துக் காட்டினார்கள். நீயும் ஏட்டுச் சுவடியுடன் தானே நிற்கிறாய். பிரித்துப் படித்துக் காட்டு..." என்றார் குரு. "குருவே , நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருக்கலாம். நான் முக்கியமாகக் கற்றது ஒன்றே ஒன்று தான் " என்றார் த்ருமர். இதைக் கேட்ட மற்றைய மாணவர்கள் தம்மை அறியாமலே சிரித்துவிட்டார்கள். குருவின் கோபம் கட்டுக் கடங்காமல் போய்விடவே தருமரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். தருமரின் கன்னம் சிவந்துவிட்டது. கண்கள் கலங்கிவிட்டன. இருந்தும் தருமர் அமைதியாகவே நின்றார்.

முனிவர் கோபத்தில் கத்தினார். "அப்படி நீ கற்றுக்கொண்ட முக்கியமான பாடம் தான் என்ன?" "அதை மட்டும் ஓலைச் சுவடியில் எழுதி வைத்திருக்கிறேன். படித்துப் பாருங்கள் " என தருமர் ஓலைச் சுவடியை நீட்டினார். குரு அதனை வாங்கினார் சத்தம் போட்டுப் படித்தார்.

" எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும் நிதானம் இழந்து கோபத்துக்கு ஆளாகக் கூடாது " இதுதான் ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்த வாசகம். அதைப் படித்ததும் குருவும் மாணவர்களும் தருமரைப் புரிந்துகொண்டார்கள். அவர் கற்றுக்கொண்டது ஏட்டுச் சுரைக்காய் அல்ல , வாழ்க்கையில் பயன்படக்கூடிய முக்கிய பாடம்.

குரு , அன்புடன் தருமரைக் கட்டித் தழுவினார். தருமா! என்னை மன்னித்துவிடு. நீ மாணவன் அல்ல ; ஆசிரியன். நான் இதுவரை அறிந்துகொள்ளாத அனுபவ பாடத்தை எனக்குக் கற்றுக்கொடுத்துவிட்டாய்! நான் உனக்கு ஆசிரியன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்குத்தான் பெருமை.

நிதானம் தவறக்கூடாது என்பது இன்றைய இளைஞர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடம். நிதானம் தவறாத சில வித்தியாசமான இளைஞர்களும் உண்டு. அவர்கள் எப்படித் தெரியுமா?

ஓர் ஆசிரியர் மாணவரை ஒரு கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார். இவன் நிதானம் தவறவில்லை. அமைதி யாக நின்று கொண்டிருந்தான். "ஆசிரியர் ஒரு முறை அறைந்ததும் எப்படி உன்னால் நிதானம் தவறாமல் இருக்க முடிந்தது? " என்று கேட்டார்கள் நண்பர்கள். அவன் சொன்னான் "நான் நிதானம் தவறியிருந்தால் எனது ஆசிரியர் இன்னொரு கன்னத்திலேயும் அறைந்திருப்பார். அது அதை விடப் பலமாக இருக்கும்!"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இலங்கை பிரச்சினையில் மத்திய மாநில அரசுகள் என்ன செய்யப்போகின்றன?

## விஜய டி.ராஜேந்தர் கேள்வி

(சென்னை)

இலங்கை பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் என்ன செய்யப் போகின்றன? என்று விஜய டி. ராஜேந்தர் கேள்வி விடுத்தார்.

இலட்சிய திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் விஜய டி.ராஜேந்தர், சென்னையில், நேற்று முன்தினம் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

**சட்டவிரோதம்**

லட்சிய திராவிட முன்னற்றக் கழகம் தொடங்கப்பட்டு இன்றுடன் 4 ஆண்டுகள் முடிவடைந்து 5ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. கடந்த 2 மாதங்களில் தமிழகத்தில் 10 மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து, இலங்கை தமிழர்களுக்காக குரல் கொடுத்து வருகிறேன்.

இலங்கையில் அப்பாவித்தமிழர்கள் கொல்லப்படுவதை கண்டித்தும், இலங்கைக்கு இந்திய அரசு ஆயுத உதவி செய்வதை நிறுத்தக் கோரியும் ஏப்பரல் 5 ஆம் திகதி மயிலை மாங்கொல்லையில் பொதுக் கூட்டம் நடத்த இருந்தேன். ஆனால், இது சட்டவிரோதம் என்று கூட்டம் நடத்த தடை விதித்துவிட்டன.

இந்த நிலையில் 18 நாட்கள் கழித்து தற்போது இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தீர்மானம் மட்டும் நிறைவேற்றப்பட்டால் போதாது, அடுத்து இந்தப் பிரச்சினையில் மத்திய , மாநில அரசுகள் என்ன செய்யப் போகிறது. இவ்வாறு விஜய டி.ராஜேந்தர் கேள்வி எழுப்பினார். (அ-5)

# வீரவன்சவை மன்னிக்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள்; ஜே.வி.பி. நிராகரிப்பு





(கொழும்பு)

குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் அளிக்காத நிலையில், கட்சியுடன் முரண்பட்டுள்ள பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவை கட்சியில் இணைத்துக்கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச மறுத்துள்ளார்.

கட்சி தனது சொந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும் என்றும் ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிடத் தேவையில்லையென்றும் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி தற்போதைய நிலையை சமாளிக்கக் கூடிய வல்லமை பெற்றுள்ளதாக ஜனாதிபதியுடன் நடைபெற்ற தொலைபேசிக் கலந்துரையாடலில் தெரிவித்த அமரசிங்க, வீரவன்சவின் விலகலுக்குப் பின்னணியில் ஜனாதிபதியும் அவரது சகோதரரும் செயற்பட்டனர் என்பது கட்சிக்கு நன்றாகத் தெரியும் எனவும் தெரிவித்தார்.

இக் குற்றச்சாட்டை மறுத்ததுடன் இது ஐ.தே.க. பரப்பிவிடப்பட்ட கதையென ராஜபக்ஷ தெரிவித்தார்.

இருந்தபோதிலும் உண்மையில் என்ன நடந்ததென்பது தெரியும். அப்படியான கதைகளால் ஜே.வி.பியை முட்டாளாக்க முடியாதென அமரசிங்க பதிலளித்துள்ளார்.

ஜே.வி.பியிலிருந்து விலகியோருக்கு ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் பாதுகாப்பு வழங்குவதாகவும் பிரயாண வசதிகள் செய்து கொடுப்பதாகவும் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (அ-5)

## இராசிபலன்

28.04.2008
(சித்திரை 16, திங்கட்கிழமை)
உத்தராடம் காலை 07.09 மணிவரை
அட்டமி பின்னிரவு 03.51 மணிவரை
இராகுகாலம் 07.28-08.58மணிவரை
சுபநேரம் 11.58-01.28 மணிவரை
நடேசரபிஷேகம்

| | |
|---|---|
| மேடம் | கடினமுயற்சி, அதிகாரம், போசன சுகம், தூரதேசச் செய்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், தந்தைவழி உறவு, காரியதாமதம், இடமாற்றம். |
| மிதுனம் | வீண்பிரச்சினை, முயற்சி தடங்கல், ஆரோக்கியக்குறைவு, திடீர் நன்மை. |
| கடகம் | செல்வாக்கு, முயற்சி கைகூடும், தெய்வநம்பிக்கை, போசனசுகம். |
| சிங்கம் | தேகநலன், தடைப்பட்ட காரியம் கைகூடும, நல்லசெய்தி. மனமகிழ்ச்சி. |
| கன்னி | வியாபார சிந்தை, ரோகநிலை, தன்னம்பிக்கைக் குறைவு, பணவிரயம். |
| துலாம் | மாதாசுகம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்த கருமங்கள் தாமதமாகும். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, சுபநிகழ்வு, காரிய அனுகூலம், போசனசுகம். |
| தனுசு | அதிகசெலவு, உணர்ச்சிவசப்படல், முயற்சிதாதம், பிரயாணம். |
| மகரம் | பெரியோர் உதவி, நல்லமுயற்சி, தெய்வசிந்தை, போசனசுகம். |
| கும்பம் | பிரயாணம், அமைதிக்குறைவு, மனஸ்தாபம், காரியதாமதம். |
| மீனம் | குடும்பசுகம், போசனநன்மை, செய்தொழில் விருத்தி, காரிய சித்தி. |


வளவன்

# பாடசாலை சீருடை புள்ளிவிபரங்களை அனுப்பிவைக்குமாறு சுற்றுநிருபம்

## கல்விப் பணிப்பாளர்களுக்கு அமைச்சின் செயலாளர். அனுப்பிவைப்பு

2009 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடை விநியோகத்திற்குத் தேவையான துணிக் கொள்வனவு நடவடிக்கைகளை செயற்திறனுடனும், துரிதமாகவும் மேற்கொள்ள சகல கல்விப் பணிப்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.டி பண்டார சுற்றுநிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் தங்கள் வலயத்தின் தேவைகளைக்குறிப்பிட்டு மே மாதம் 10 ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்போ அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறும், அனுப்பும் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவுப் பதிவுகள் மேற்கொள்ளப் படுவதனால் உரிய தகவல்களை சரியாக அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு, கடந்த ஆண்டுகளில் சரியான புள்ளி விபரம் அனுப்பப்படாமையினால் மேலதிக தேவைகளுக்காக மீண்டும் கொள்வனவு செயற்பாடுகளை மேற்கொண்டமையினால் உரிய தினத்தில் விநியோகப் பணிகளை பூர்த்தி செய்ய முடியாமல் கல்வியமைச்சு பாரிய சிரமங்களை எதிர்நோக்கியது எனவும் அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-19)



மட்டுவில் பிரசித்த வைத்தியர் "பேதுரு பிலிப்" பின் ஞாபகார்த்த தூபியைப் படத்தில் காணலாம்.

# அரச சார்பற்ற நிறுவனங்களின் மேலும் 8 திட்டங்களுக்கு அனுமதி

## யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்.மாவட்டத்தில் 9.2 மில்லியன் ரூபா பெறுமதியான மேலும் 8 திட்டங்களைச் செயற்படுத்த அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

கடந்த 10ஆம்திகதிநடைபெற்ற 6ஆவது மாவட்ட மீளாய்வுக்குழு கூட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்வைக்கப் பட்ட 20.5மில்லியன் ரூபா பெறுமதியான 12 திட்டங்களில் முன்மொழிவு களிலிருந்தே 9.2 மில்லியன் ரூபா பெறுமதியான 8திட்டங்களுக்கு அனுமதியளிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதில் யூ.என்.எச்.சி.ஆர் இன் நிதியுதவியின் கீழ் 1.15 மில்லியன் ரூபா பெறுமதியில் சொலிடார்(Solidar) நிறுவனத்தால் போரினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்த சமூகத்திற்கான அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கல்.வாழ்வாதாரம் மற்றும் விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள்.

யுனோப்ஸ் (Unops) நிறுவனத்தினால் வல்வெடடித்துறை ஊறணி பொது மயானத்தைச் சுற்றி தடுப்பு மதில் அமைத்த தற்காக 5.75 மில்லியன் ரூபா பெறுமதியான செயற்திட்டம் யூ.என்.எச்.சி. ஆர்.உதவியின் கீழ் 1.2 மில்லியன் ரூபா பெறுமதியில் தமிழர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நலன்புரி நிலையங்களில் பெண்கள் குழுக்களை அமைத்து வருமானம் பெறக்கூடிய தொழிற்ப்பயிற்சிகளை வழங்குவதற்கான செயற் திட்டம் என்பவையே ஆகும் எனவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். இதேவேளை 2008ஆம் ஆண்டின் முதற்காலாண்டுப் பகுதியில் செயற்படுத்துவதற்காக ஏற்கனவே 39 செயற்திட்டங்களுக்கு 27கோடியே 70 இலட்சத்து 9ஆயிரத்து 313 ரூபா மாவட்ட மீளாய்வு குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3,4,5)

## உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்

உரும்பிராய் மேற்கு உரும்பிராயைச் சேர்ந்த பொன்னையா துரைராசா என்பவரின் தே.அ.அ.(383291550V), விசேட அடையாள அட்டை (090204110), துரைராசா இராஜமலரின் வி.அ.அ. (0902008352) என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும். (அ-6)

## சதுரங்கப் போட்டி

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்தில் நடாத்தப்பட்ட சதுரங்க சுற்றுப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாடசாலை மாணவர் அணிகளின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இச் சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இம் மாதம் 15,16,17ஆம் திகதிகளில் நடைபெற்றன. யாழ்.மாவட்டத்தில் வலய ரீதியாக இடம்பெற்ற சதுரங்க சுற்றுப்போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலை மாணவர்களின் அணிகளே இம் மாவட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றின. இப்போட்டியில் முதல் இரு இடங்களையும் பெற்றுக்கொண்ட பாடசாலை மாணவர் அணிகள் வடக்கு மாகாண ரீதியில் நடாத்தப்படும் சுற்றுப்போட்டியில் பங்குபெறவுள்ளனர். மாகாண ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டும் பாடசாலை அணிகள் அகில இலங்கை ரீதிச் சுற்றுப்போட்டிக்கு தெரிவுசெய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மட்டப் போட்டி முடிவுகள்,

**19வயதிற்குக் கீழ் ஆண்கள்**

1.யாழ்.இந்துக்கல்லூரி
2.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
3.சாவகச்சேரி விக்னேஸ்வராக்கல்லூரி

**19வயாதிற்குக் கீழ் பெண்கள்**


1. யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2.வேம்படி மகளிர் கல்லூரி
3.நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

**15 வயதிற்குக் கீழ் ஆண்கள்**

1.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
2.யாழ்.இந்துக்கல்லூரி
3.யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி

இச்சதுரங்க சுற்றுப் போட்டிகளின் மத்தியஸ்தராக எஸ் அருணகிராஜா கடமையாற்றினார். (அ-52)

# இலங்கை நிர்வாக சேவை தரம் Iக்கு பதவி உயர்வு



கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் இலங்கை நிர்வாக சேவை தரம் Iக்கு பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார்.

கல்வித் திணைக்களத்தில் ஆசிரியராக அரச சேவையில் இணைந்துகொண்ட இவர் 11 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி 95ஆம் ஆண்டு செட்டிக்குளம் உதவிப் பிரதேச செயலராக நியமனம் பெற்ற இவர் பின்னர் வவுனியா பிரதேச செயலராகப் பதவி உயர்த்தப்பட்டார். 2004 ஆம் ஆண்டு கரவெட்டிப் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்று பணியாற்றி வருகின்றார்.

நாரந்தனை கணேசா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரிகளின் பழைய மாணவரான இவர் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரியாவார். இவர் பொது நிர்வாக முதுமாணிப் பட்டத்தையும் பெற்றிருக்கிறார். தற்போது யாழ். பல்கலைக்கழகத்தில் திட்டமிடலில் முதுகலைமாணி பயிற்சி நெறியை மேற்கொண்டுள்ளார். நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நில அளவைப் பட வரைஞரான பொன்னம்பலம் சிவலிங்கம் தம்பதிகளின் புத்திரரென்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-52)

# காரைநகரில் அதிகரித்து வரும் சட்டவிரோத செயல்கள்

(காரைநகர்)

காரைநகரில் சட்டவிரோத செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் வியாவில், கல்வந்தாழ்வு, மருதபுரம், காரைமத்தி, துங்கோடை, மாப்பாணசூரி, பிட்டியெல்லை, களபூமி ஆகிய கிராமங்களில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்றுவருகின்றனர். இதனால் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் பெரும் உயிராபத்துக்களை எதிர்நோக்குவது டன் நேர்வழியில் மின்சாரம் பெற்ற மின் பாவனையாளர்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் சட்டவிரோதமாக கடைகளிலும் வீடுகளிலும் மதுபான விற்பனை மேற்கொண்டு வருகின்றனர். இவ் மதுபான விற்பனைக்கடைகள் பிரதான வீதிகளிலும் ஆலயங்களிற்கு அண்மையிலும் அமைந்துள்ளதனால் பொதுமக்கள் பலரும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன் பச்சை மரங்கள் தறித்தல் மற்றும் அனுமதியின்றி வீட்டு மரங்கள், கதவுகள் என்பன களவாக கழற்றி விற்பனை செய்தல் போன்ற சமூகவிரோத செயல்கள் தாரளமாக நடைபெறுகின்றன. தற்போது நடைபெற்று வரும் வீட்டுத்திட்ட வேலைகளைப் பயன்படுத்தி ஆட்களில்லாத வீடுகளின் ஓடுகள், மரங்கள் என்பன கழற்றி விற்பனை செய்யப்படும் அதேநேரம் கடந்த வாரம் களவாக கழற்றப்பட்ட கதவுகளும் ஓடுகளும் கிடுகு மட்டையிற்குள் மறைத்து வைத்து லான்ட் மாஸ்ரரில் காரைநகருக்கு வெளியே கொண்டு செல்ல முற்பட்டபோது பொதுமக்களின் தகவலையடுத்து கிராமசேவையாளரால் பிடிக்கப்பட்டு மேலதிக விசாரணைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் குறித்த லான்ட்மாஸ்ரரும், சாரதியும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த சட்டவிரோத செயற்பாடுகளைக் குறைப்பதற்கு உரிய அதிகாரிகளும் பொது அமைப்புக்களும் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (அ-246)

## வீதி திருத்தக் கோரிக்கை

(காரைநகர்)

காரைநகர் கிழக்கில் அமைந்துள்ள விளானை -திக்கரை வீதி பல வருடங்களாக திருத்தப்படாத நிலையில் உள்ளது.

இற்றைக்கு சுமார் 40 ஆண்டுகளிற்கு முன்னர் புனரமைக்கப்பட்ட இவ்வீதி இன்னமும் புனரமைக்கப்படாது உள்ளபடியினால் பாதசாரிகள், துவிச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இக் கிராமங்களில் பயணிகள் பஸ்சேவை இல்லாதபடியால் அனைத்துப் பொதுமக்களும் நடந்தும் , மிதிவண்டியிலும் சென்றே தமது அன்றாட கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆதலால் பாமர மக்கள் பயன்படுத்தும் இவ் வீதியை உடனடியாக புனரமைத்துத் தரும்படி பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரியைக் கேட்டுள்ளனர். (அ-246)




## வலி மேற்கு கலாசாரப் பேரவை நடத்தும் போட்டிகள்

வலி மேற்கு கலாசாரப் பேரவையினால் இசை, சமூகம் நாடகம், நாட்டுக்கூத்துப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப் போட்டிகளுக்கான நிபந்தனைகளையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். இப்போட்டி யில் வலி மேற்கிலுள்ள மன்றங்கள் அல்லது குழுக்கள் அல்லது தனிநபர்கள் பங்குபற்றலாம். போட்டிகளில் வெற்றிபெறும் முதல் மூன்று பேருக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்குவதுடன் முதலாமிடத்தைப் பெறும் நெறியாளரின் படைப்பு பிரதேச கலாசார விழாவில் மேடையேற்றப் படும் என்றும் இப் போட்டிகளில் கூடுதலான கலைஞர்கள் பங்குபற்றி தமது திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் விண்ணப்பம் ஏற்றுக் கொள் ளப்படும் இறுதித் திகதி 09.05.2008 என்றும் சங்கானை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-7)

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் கிராம உப அலுவலகம், உலக புத்தக தினத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும், புத்தக காகிதாதிகள் விற்பனையும் இன்று திங்கட்கிழமை முதல் 30 ஆம் திகதி புதன்கிழமை வரை மூன்று நாட்கள் தினமும் காலை 9.30 மணி முதல் பி.ப 3மணி வரை மானிப்பாய் கிராம உப அலுவலகப் பொறுப்பதிகாரி ச.சந்திரமவுலி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி தென் மேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம், சிறப்பு விருந்தினராக ஆனைக்கோட்டை.வெஸ்ரா தொழிலக உரிமையாளர் சு.சுதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.


அத்துடன் யாழ்ப்பாணத்தின் முன்னணி புத்தக விற்பனையாளரான பூபாலசிங்கம் புத்தகசாலையின் விற்பனைக்கூடமும் திறந்து மலிவு விலையில் விற்பனை இடம் பெறும். (ஓ)


## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சிக் க்ல்வி வலய அதிபர்கள், கணிப்பீட்டுக்குப் பொறுப்பான பிரதி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருக்கான உள்ளக, வெளியக மதிப்பீடு தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளது.

அதிபர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் புதன்கிழமை காலை 8.30 மணிக்கும், கணிப்பீட்டுக்குப் பொறுப்பான பிரதி அதிபர்/ ஆசிரியர்களுக்கான செயலமர்வு மே மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் நிலையத்தில் நடை பெறும் என இதனை ஒழுங்கு செய்யும் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (அ-19)





நவக்கிரி அமெரிக்க மிஷன் தமிழ்கலவன் பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிராம அலுவலர் சி.எழிலரசன் மாலைஅணிவித்து வரவேற்கப்படுவதையும், கௌரவ விருந்தினரான க.தர்மலிங்கம் ஜே.பி மங்கல விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினரான சேவாலங்கா பணிப்பாளர் வி.கேசவன் உரையாற்றுவதையும், பாடசாலைஅதிபர் க.சி.பகவத்சிங்கம் அருகில் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## ஐ.பி.எல். இருபது-20 தொடர்

# சென்னை சுப்பர்கிங்ஸ் வெற்றி; கங்குலி அணிக்கு முதல் தோல்வி

(சென்னை)

கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 9 விக்கெற்றுக்களால் அபார வெற்றி பெற்றது சென்னை







சுப்பர் கிங்ஸ் அணி.

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது -20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் சர்வதேச பிரபல வீரர்கள், உள்ளூர் வீரர்கள் அடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இத்தொடரில் நேற்று முன்தினம் நடந்த லீக் சுற்றின் 11ஆவது ஆட்டத்தில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப்போட்டில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, ஜேக்கப் ஓரம்மின் சிறப்பான பந்துவீச்சில் ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. இறுதியில் இருபது ஓவர்கள் நிறைவில் 9 விக்கெற்றுக்களை இழந்து 147 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சுக்கிலா 42 ஓட்டங்களையும் ஷாகா 27, மக்கலம் 24 ஓட்டங்களையும் எடுத்தனர் பந்துவீச்சில் ஜேக்கப் ஓரம் 3 விக்கெட்டுக் களையும் ஹோனி, அமர்நாத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 148 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி; ஹைடன், அணித்தலைவர் தோனியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் 17 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெற்றை மாத்திரம் இழந்து 152 ஓட்டங்களை எடுத்து 18 பந்துகள் மீதமுள்ள நிலையில் 9 விக்கெற்றுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதில் மத்யூஹைடன் 49 பந்துகளில் (6பவுண்டரிகள், 3சிக்சர் உட்பட) 70 ஓட்டங்களையும் தோனி 27 பந்துகளில் (3பவுண்டரிகள் 2சிக்சர்கள் உட்பட) 43 ஓட்டங்களையும் மற்றும் பார்த்திப் பட்டேல் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ஆட்டநாயகனாக சென்னை அணியின் வெற்றிக்கு வழி அமைத்த ஜேக்கப் ஓரம் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி விளையாடிய 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.



இதேவேளை, கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலாவது தோல்வியைச்சந்தித்துள்ளது. முன்னதாக நடைபெற இரண்டு ஆட்டங்களிலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## வாய்ப்பை இழந்த லசித் மலிங்க

(கொழும்பு)

இந்தியன் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இழந்துள்ளார்.

அவரது கணுக்காலில் ஏற்பட்டுள்ள உபாதை அதிகரித்துள்ளமையே இதற்கான காரணமாகும்.

இதனால் அவருக்கு சுமார் மூன்று மாதங்கள் போட்டிகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் ஓய்வெடுக்க வேண்டி நேரிட்டுள்ளது.

இவர் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான மும்பாய் இந்தியன்ஸ் அணியில் விளையாட இருந்தார்.

தற்போது அவர் இந்தப்போட்டித் தொடரில் பங்கு பற்றாததால் அவருக்குப் பதிலாக மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான டிவைன் பிராவோ அழைக்கப் பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பொதுநலவாய கிண்ணத்துக்கான முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் போது லசித் மலிங்கவின் கணுக்காலில் உபாதை ஏற்பட்டது.

இதனையடுத்து அவருக்கு 2டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் சர்வதேச போட்டிகளைக் கொண்ட மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் தொடரில் விளையாட முடியாமல் போனது.

எனினும், இந்திய பிரிமியர் லீக் போட்டியில் விளையாட உள்ளதாக லசித் மலிங்க தெரிவித்திருந்த போதிலும் அவரது பாதத்தில் ஏற்பட்டுள்ள உபாதை முழுமையாக குணமடையவில்லை என வைத்திய அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

இதனால். அவருக்கு தொடர்ந்து ஓய்வு எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (5)

## சிறிசாந்துக்கு கன்னத்தில் அறைந்த விவகாரம்

# ஐ.பி.எல். அணியிலிருந்து ஹர்பஜன் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்

## 10 போட்டிகளில் தடை விதிக்கப்படலாம்

(மொகாலி)

ஹர்ஜன் சிங் இன்னொரு சர்ச்சையில் சிக்கியுள்ளார். சிறிசாந் கன்னத்தில் இவர் ஓங்கி அடித்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

மொகாலியில் நடந்த ஐ.பி.எல்.லீக் போட்





டியில் யுவராஜ் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் லெவின்அணி, மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. சச்சின் இடம் பெறாததால் மும்பை அணியின் தலைவராக மீண்டும் ஹர்பஜன் பொறுப்பேற்று இருந்தார். தனது அணி தொடர்ந்து மூன்றாவது முறையாக தோல்வி அடைந்த வெறுப்பில் இருந்தார். போட்டி முடிந்ததும் பஞ்சாப் அணிக்காக விளையாடும் சிறிசாந் ஏதோ கூற ஆத்திரமடைந்துள்ளார் ஹர்பஜன். உடனே அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்துள்ளார். இதனால் அதிர்ந்து போன சிறிசாந் மைதானத்தில் சிறு குழந்தை மாதிரி கதறி அழுதார். இதை பார்த்த ரசிகர்களுக்கு முதலில் என்ன நடந்தது என்றே புரியவில்லை. பின்னர்தான் ஹர்பஜன் அடித்த விவகாரம் தெரியவந்தது. இந்த பிரச்சினை தொடர்பாக இன்று விளக்கம் அளிக்கும்படி ஹர்பஜனுக்கு இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

### பிளவு ஏற்படுத்துமா?

ஐ.பி.எல் தொடரில் ஒரே அணியை சேர்ந்த வீரர்கள் எதிரணியில் இடம் பெற்று நேருக்கு நேர் மோதினர். இதனால் சர்வதேச அளவில் வீரர்கள் மத்தியில் பகைமை குறைந்து நட்புணர்வு ஏற்படும் என கருதப் பட்டது. ஆனால் இந்திய வீரர்கள் மத்தியிலேயே பிளவு ஏற்படும் அபாய நிலை தற்போது உருவாகியுள்ளது. இதற்கு கோடிகளில் புரளும் ஐ.பி.எல் காரணமா அல்லது வீரர்களின் நடத்தை தான் காரணமா?

### ஐ.சி.சி தடை விதிக்குமா?

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விதிமுறை 4.1கீழ் எதிரணி வீரர், நடுவரை உடல் ரீதியாக தாக்குவது குற்றம். இதற்கு 5டெஸ்ட், 10 ஒரு நாள் போட்டி அல்லது வாழ்நாள் தடைவிதிக்கலாம். ஆனாலும் ஐ.பி.எல் என்பது உள்ளூர் போட்டி என்பதால் இந்திய கிரிக்கெட் சபை நடத்தை விதிமுறைப்படிதான் ஹர்பஜன் மீது நடவடிக்கை எடுக்க முடியும். இதில் ஐ.சி.சி தலையிடாது.

### தற்காலிகமாக நீக்கம்

சிறிசாந் கன்னத்தில் அறைந்த விவகாரம் தொடர்பாக ஐ.பி.எல் தொடரில் இருந்து ஹர்பஜன் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். நேற்று டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் இவர் பங்கேற்க வில்லை. வீடியோ ஆதாரங்களின்படி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது இன்று டில்லியில் நடக்கும் ஒழுங்கு நடவடிக்கை விசாரணை குழு முன்பு ஆஜராகி விளக்கம் அளிக்க உள்ளார். இதில் அதிகபட்சமாக 10 போட்டிகள்வரை தடை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. தப்புவாரா ஹர்பஜன்? (5)

## வோர்ன் அணி ஹட்ரிக் வெற்றி; பெங்களூர் அணியை வீழ்த்தியது

வோட்ஷனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் 7 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இந்திய கிரிக்கெட் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் முதலாவது இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் சர்வதேச வீரர்கள், உள்ளூர் வீரர்கள் அடங்கிய 8 அணிகள் மோதுகின்றன.

இத்தொடரில் நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற லீக் சுற்றின் 12 ஆவது போட்டியில் ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8விக்கெட்டுக்களையிழந்து 135 ஓட்டங்களை எடுத்தது.

இதில் றெய்லர் 20 பந்துகளில் (6பவுண்டரிகள். 3சிக்ஸர்கள் உட்பட) 44 ஓட்டங்களையும் பிரவீன் குமார் 34ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் வோட்ஷன், முனாப் பட்டேல் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 136 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, வொட்ஷனின் சிறப்பான ஆட்டத்தால் 17.1 ஓவர்களில் 3விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 138 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் வோட்ஷன் 41 பந்துகளில் (8பவுண்டரிகள் 2சிக்சர் உட்பட) 61 ஓட்டங்களையும் சிமித் 49 ஓட்டங்களையும் மற்றும் யூசுப் பதான் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரவீன் குமார், ஜாகீர் கான், ஜோசி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக வோட்ஷன் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் அணி விளையாடிய 4 போட்டிகளில் முதலாவதில் தோல்வி அடைந்தது. பின்னர் தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. இதேவேளை மூன்று போட்டிகளில் விளையாடிய ராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி 2ஆவது தோல்வியை சந்தித்துள்ளது. (5)

# விண்வெளியில் உயிரினம் இருக்கலாம் ஆனால் புத்திசாலித்தனம் இருக்காது

## பிரபல விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங் நம்பிக்கை

(வோஷிங்டன்)

விண்வெளியில் உயிரினங்கள் உண்டா? இந்த கேள்வியை பல நூற்றாண்டுகளாக மனிதன் கேட்டு வருகிறான். பிரபல விண் வெளி விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங்கிடம் இந்த கேள்வியை கேட்டபோது விண்வெளியில் முதிர்ச்சி



பெறாத உயிரினம் இருக்கலாம் . ஆனால் அந்த உயிரினத்திடம் புத்திசாலித்தனம் இருக்காது என்றே பதில் கிடைத்தது.

பிரபல விண்வெளி விஞ்ஞானி ஸ்டீபன் ஹாகிங் (66) பிரிட்டன் நாட்டை சேர்ந்தவர். அம்யோடிரோபிக் லேட்ரல் ஸ்லொரோசிஸ் என்ற நரம்பு தளர்ச்சி நோயால் பாதிக்கப்பட்டவர். இந்நோயால் பாதிக்கப்பட்டவரால் நடமாட முடியாது. சக்கர நாற்காலியில் தான் வாழ்க்கையை ஓட்ட வேண்டும். ஸ்டீபன் ஹாகிங்கினால் பேசக்கூட முடியாது. விசேஷ கருவியின் உதவியுடன் தான் அவர் பேசி வருகிறார். இருந்தாலும் விண்வெளி ஆராய்ச்சியில் அவரது முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் 50 ஆண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழகத்தில் ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் பங்கேற்று ஸ்டீபன் ஹாகிங் பேசியதாவது, இந்த பிரபஞ்சத்தில் பூமியை தவிர வேறு எங்காவது உயிரினம் வாழ்கிறதா? அந்த உயிரினத்தின் ஒலிப் பரப்பை மனித குலத்தால் ஏன் இதுவரை குறுக்கிட முடியவில்லை? இந்தக் கேள்விக்கு பல நூற்றாண்டுகளாக பதில் இல்லை எனினும் இதற்கு மூன்று வாய்ப்புகள் உள்ளன.

முதலாவதாக பூமியை தவிர எங்கும் உயிரினமே இல்லை என்று கூறி விடலாம். இரண்டாவதாக பிரபஞ்சத்தில் எங்கோ ஒரு பகுதியில் மனிதனை விடபுத்திசாலித்தனமான உயிரினம் இருக்கலாம். விண்வெளியில் சமிக்ஞைகளை அனுப்பும் அளவுக்கு அந்த உயிரினம் புத்திசாலித்தனமாக இருந்தால் பூமியில் வாழும் உயிரினங்களை அழிக்கும் அளவுக்கு சக்தி வாய்ந்த ஆயுதங்களை தயாரிக்கும் திறனை அந்த உயிரினம் பெற்று இருக்கலாம். நான் மூன்றாவது வாய்ப்பை தான் நம்புகிறேன்.

இதன்படி பிரபஞ்சத்தில் எங்கா வது உயிரினம் வாழ்ந்து வரலாம். ஆனால் அந்த உயிரினம் முதிர்ச்சி அடைந்து இருக்காது. மனிதனை போன்று புத்திசாலித்தனம் இருக்காது. அந்த உயிரினத்தை நேரில் சந்திக்க நேரிட்டால் மனிதனுக்கு உடனடியாக நோய்த் தொற்று ஏற்படும். அந்த நோய்த் தொற்றை தடுக்கும் சக்தி மனிதனிடம் இல்லை. இவ்வாறு ஸ்டீபன் ஹாகிங் கூறினார். (அ-5)

## மறுவாக்கு எண்ணிக்கையிலும் எதிர்க்கட்சிகள் முன்னணி

(ஹராரே)

தென் மத்திய ஆபிரிக்க நாடான சிம்பாவேயின் அதிபராக 84 வயதான றொபேட் முகாபே இருந்து வருகிறார். கடந்த 28 ஆண்டு காலமாக, இவரது கட்சியே ஆட்சி பொறுப்பில் உள்ளது. கடந்த மார்ச் மாதம் சிம்பாப்வே பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அதில் எதிர்கட்சிகள் பெரும்பாலான இடங்களை கைப் பற்றின. எனினும் முகாபேயின் நெருக்கடியால் தேர்தல் முடிவுகள் வெளியாக வில்லை. இதனால் நாடு முழுவதும் கலவரம் வெடிக்கும் நிலை ஏற்பட்டது.

### உலக தரிசனம்

இந்த நிலையில் உலக நாடுகளின் நெருக்கடியை தொடர்ந்து மறுவாக்கு எண்ணிக்கை நடத்த அதிபர் முகாபே ஒப்புக் கொண்டார். அதன்படி மறு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இதுவரை வெளியான 13 முடிவுகளில், பெரும்பாலான இடங்களில் எதிர்க் கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன.

இதன் மூலம் றொபேட் முகாபேயின் 28 ஆண்டுகால ஆட்சி முடிவுக்கு வருவது உறுதியாகி விட்டது.

(அ-5)

# பின்லேடன் தீவிரவாத பாதைக்கு திரும்பியது எப்படி? விருது பெற்ற எழுத்தாளரின் புத்தகத்தில் புதிய தகவல்

(லண்டன்)

அமெரிக்க அரசாங்கத்தால் சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டு தீவிரமாக தேடப்



பட்டுவரும் அல்-கொய்தா இயக்க தலைவர் பின்லேடன் பற்றி புதிய புத்தகம் ஒன்று வெளியாகி உள்ளது. 'தி பின்லேடன்ஸ்' என்ற அந்த புத்தகத்தை புலிட்சர் விருது பெற்ற ஸ்டீவ் கோல் எழுதி உள்ளார். இதில் பின்லேடன் தீவிரவாத பாதைக்கு திரும்பியது எப்படி? என்பது பற்றி புதிய தகவலை அவர் வெளியிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு,

சவூதி அரேபியாவில் மிகப் பெரும் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்த பின்லேடன் தனது சகோதரர்கள் சகோதரிகள் ஆகியோருடன் வசித்தார். சிறு வயதில் அவர் மத படிப்புக்களில் மூழ்கி இருந்தார். அந்த நேரத்தில் அதாவது 1967இல் அவருக்கு 9 வயது இருக்கும் போது அவரது தந்தை ஒரு விமான விபத்தில் பலியானார். அப்போதுதான் பல பெரியவர்கள் அவருக்கு தீவிரவாத கோட்பாடுகளை போதனை செய்தனர்.

**மூத்த சகோதரர்**

பின்லேடனின் மூத்த சகோதரர் சலீம். இவர் பின்லேடனைப் போல இல்லாமல் தன்னை முழுமையாக வர்த்தகத்தில் ஈடுபடுத்திக் கொண்டார். அவரது பேச்சுத் திறமை சவூதி அரேபிய அரச குடும்பத்துடன் நெருக் கமான தொடர்பை பெற்றுத் தந்தது. அதன் மூலம் நிறைய ஒப்பந்தங்கள் வந்தன. இந்த நேரத்தில் குவைத் மீது சதாம் உசேன் படை எடுத்ததால் அதை முறியடிக்க சவூதி மண்ணில் அமெரிக்க படைகள் அனுமதிக்கப்பட்டன. இதனால் ஓமானில் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு பின்லேடன் ஆதரவு தெரிவித்தால் அவருக்கும் சவூதி அதிகாரிகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மற்றொரு பக்கம் குடும்பத்தில் கருத்து வேறுபாடு உருவானது. இதனால் அவர் சூடானில் குடிபுகுந்தார். இந்த நேரத்தில் அவரது மூத்த மகன் அவரை விட்டு பிரிந்தார். இதனால் ஏற்பட்ட தனிமை பின்லேடனின் தீவிரவாத கொள்கைகளுக்கு மேலும் உரமேற்றி விட்டது. எனினும் மூத்த சகோதரரான சலீம் குடும்பம் சிதறி விடாமல் கட்டுக்கோப்பாக வைத்திருந்தார். அவரை மீறி பின்லேடனால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால் 1988இல் எதிர்பாராத விதமாக சலீம் விமான விபத்தில் பலியானார். அவரது மரணம் தான் பின்லேடனை தீவிரவாத பாதையில் முழு தீவிரத்துடன் இறங்க வழி வகுத்துள்ளது. சலீம் மட்டும் உயிருடன் இருந்து இருந்தால் அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் மீது நடந்த தாக்குதல் சம்பவமே நடைபெற்று இருக்காது என்று சலீமின் பல நண்பர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

இவ்வாறு எழுத்தாளர் ஸ்டீவ் கோல் அந்த புத்தகத்தில் கூறியுள்ளார். (அ-5)

## ரஷ்யா மிரட்டுவதாக ஜோர்ஜியா குற்றச்சாட்டு

(லண்டன்)

இராணுவ தாக்குதல் நடத்தப் போவதாக ரஷ்யா நேரடியாக மிரட்டுவதாக ஜோர்ஜியா குற்றம் சாட்டியுள்ளது.

ஜோர்ஜியாவில் இருந்து பிரிந்து சென்ற பகுதிகளான அப்காசியா மற்றும் தெற்கு ஒஸ்ஸாட்டியாவில் இருக்கின்ற ரஷ்ய மக்களைக் காப்பாற்றுவதற்கு தேவையானால் இராணுவப் பலத்தை பயன்படுத்துவோம் என ரஷ்யா கூறியிருப்பதாக ஜோர்ஜியா கூறுகின்றது.

ரஷ்யா அவ்வாறு நடந்து கொண்டால் அது சர்வதேச சட்டங்களை மீறும் செயலாக இருக்கும் என ஜோர்ஜியா கூறுகிறது.

பிரிந்து சென்ற பகுதிகளுக்கு அருகாமையில் ஜோர்ஜியா துருப்புகளை குவித்து வருவதாக மூத்த ரஷ்ய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அப்காசியா மற்றும் தெற்கு ஒஸ்ஸாட்டியாவில் இருக்கும் பெரும்பாலானவர்களுக்கு ரஷ்யா கடவுச்சீட்டுக்களை வழங்கியுள்ளது.

(அ-5)

## நியூசிலாந்தில் கடும் பூகம்பம்

(வெலிங்டன்)

தெற்கு நியூசிலாந்தில் நேற்று அதிகாலை கடும் பூகம்பம் தாக்கியது. எனினும் இதன் காரணமாக உயிரிழப்போ பொருட்சேதமோ ஏற்பட்டதாக உடனடித் தகவல்கள் வெளியாகவில்லை.

நியூசிலாந்தின் தென்மேற்கே இன்வர்கார்கில் என்ற இடத்தில் கடலுக்கு அடியில் இந்த பூகம்பம் ஏற்பட்டதாக நியூசிலாந்து புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி காலை 11.35க்கு (இலங்கை நேரம் காலை 5 மணி) ஏற்பட்ட இந்த பூகம்பம் ரிச்டர் அளவுகோலில் 6.1என்ற அளவில் பதிவானது.

இந்த பூகம்பம் நியூசிலாந்தின் பல்வேறு நகரங்களிலும் உணரப்பட்டதாகவும் எனினும், உயிரிழப்போ பொருட்சேதமோ ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகவில்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த பூகம்பம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப் படவில்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.(அ-5)

## தொழிற்சாலையில் தீ 60 பேர் கருகிச் சாவு

### மொராக்கோவில் சம்பவம்

(கசபிளாங்கா)

மொராக்கோ நாட்டில் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 60 பேர் கருகிப்பலியாகினர். ஆபிரிக்கா கண்டத்தில் உள்ளது மொராக்கோ நாடு. இங்குள்ள கசபிளாங்கா நகரில் இராசாயன தொழிற்சாலை உள்ளது. 4 மாடி கட்டடத்தில் இது இயங்கி வந்தது. 150 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டதும் 3ஆவது மற்றும் 4ஆவது மாடிகள் முழுவதும் தீப்பற்றிக் கொண்டது. இதற்குள் தொழிலாளர்கள் சிக்கி கொண்டனர். அவர்களால் தப்பி வெளியே வரமுடியவில்லை.

தீக்குள் சிக்கி 60 பேர் பலியாகி விட்டனர். 12 பேர் படுகாயம் அடைந்தனர். சிலர் தீ விபத்து ஏற்பட்டதும் மாடியில் இருந்து கீழே குதித்தனர்.

இதனால் அவர்கள் கால் எலும் புகள் முறிந்தன. (அ-5)

# வெளிநாட்டு தீவிரவாதிகளால் பாகிஸ்தான் நாசமாகிறது

## அதிபர் முஷரப் வேதனை

(லாகூர்)

பாகிஸ்தான் லாகூரில் நடந்த ஒரு விழாவில் அதிபர் முஷரப் கலந்துகொண்டு பேசினார். அவர் கூறியதாவது,

தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானுக்குள் நுழைந்து நாட்டுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். ஆப்கானிஸ்தான் உஸ்பெகிஸ்தான் என பல நாட்டு தீவிர வாதிகளும் இப்போது பாகிஸ்தானில் உள்ளனர்.

அவர்கள் வடமேற்கு பகுதியில் பழங்குடியின மக்களோடு கலந்து உள்ளனர். மலைப் பகுதிகளில் பதுங்கி இருப்பதால் அவர்களை ஒடுக்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு தீவிரவாதிகளால் பாகிஸ்தானே இப்போது நாசமாகி கொண்டிருக்கிறது. பாகிஸ்தான் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஏற்பட்டுள்ள அரசு தீவிரவாதிகள்



பிரச்சினையில் முக்கிய தீர்வுகளை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன் இவ்வாறு அவர் கூறினார்.

(அ-5)

## ஆப்கானில் தற்கொலைப்படை தாக்குதல் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் அதிபர்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகரம் காபூலில் நேற்றுக் காலை போர் வீரர்கள் விழா நடந்தது. இதில் அதிபர் ஹமீது ஹர்சாய் கலந்து கொண்டார் .

விழா தொடங்கும் போது அந்த நாட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அப்போது தீவிரவாதிகள் சிலர் அந்த கூட்டத்துக்குள் புகுந்து சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். வெடிகுண்டும் வெடித்தது.

உடனே ஹர்சாய்யின் பாதுகாப்பு படையினர் அவர்கள் மீது எதிர்த்தாக்குல் நடத்தினார்கள்.

இதில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதிபர் ஹமீது ஹர்சாய்க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. அவர் பத்திரமாக வேறு இடத்துக்கு கொண்டு செல்லப் பட்டார்.

விழாவில் பங்கேற்ற ஒருவர் துப்பாக்கிக் குண்டுக்கு பலியானார். 11பேர் காயம் அடைந்தனர். (அ-5)

# ரஷ்ய கல்வி

ஆசியக் கண்டத்தின் வடக்குப் பகுதியில் பசுபிக் பெருங்கடலையும் ஆர்க்டிக் பெருங் கடலையும் எல்லைகளில் கொண்டிருக்கும் ரஷ்யா மிக அழகிய தரைப் பகுதிகளையும், மலைப்பகுதிகளையும் கொண்டநாடு. கம் யூனிஸ் களால் பெரிதும் நிர்வகிக்கப்பட்ட ரஷ்யா 1991 வரை சோவியத் யூனியன் என அழைக்கப்பட்டது.

1900-1991களில் அப்பொது அதன் அதிப ராக இருந்த கோர்பசேவ் கொண்டு வந்த சீர்தி ருத்தங்களின் பின் சோவியத் யூனியனில் இணைந்திருந்த நாடுகள் தனி நாடுகளாகப் பிரிந்த பின் ரஷ்ய கூட்டமைப்பாக மாறியது. அதன் பின் 2000 வரை பல்வேறு பிரச்சினை களை சந்தித் தபோதிலும், அதன் பின் நிலை யான முன்னேற்றத்தைக் காணத்தொடங்கி யுள்ளது.



சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் அமெரிக்கா உலகின் ஒரே துருவ சக்தியாக மாறத் தொடங்கியபோதும், இன்னமும் கூட உலகின் முக்கியமான நாடாக விள்ங்குகிறது.

இதன் மக்கள் தொகை 14 கோடியே 30 இலட்சம். இங்கு பல மொழிகள் பேசப்பட்ட போதும் அதிகாரபூர்வ மொழியாக ரஷ்ய மொழியே இருக்கிறது. தலைநகரம் மாஸ்கோ.

அமெரிக்காவைப் போலவே சமமான அழகிய பிரதேசங்களையும் இயற்கை வளங்க ளையும் இந்த நாடும் கொண்டிருப்பதை மாண வர்கள் அறிய வேண்டும். மாஸ்கோவாக இருந் தாலும் சரி, செயின்ட் பீட்டர்ஸ் பார்க்காக இருந் தாலும் சரி, இங்குள்ள தோற்றங்கள் கலாசார செறிவு மிக்க கடந்த காலச் சுவடுகளையும் நிகழ் காலச் செறிவுகளையும் உங்கள் கண்முன் நிறுத்தி மனதை கவரும் சக்தி படைத்த பூமி இது. இதன் மிகப் பிரசித்தி பெற்ற முக்கிய கல்வி நிறுவனங்கள் பெரும்பாலானவை இந் நகரங் களிலேயே உள்ளன. இதில் கல்வி பயில நகர்ப் புறச் சூழ லில் உள்ள கல்வி நிறுவனங்களும் கிராமப் புறச் சூழலில் உள்ள கல்வி நிறுவனங் களும் பல உள்ளன.




### ரஷ்ய கல்வியின் சிறப்பு

உலகின் மிக முக்கிய நாடாகவும் எழில்மிகு நகரங்களைக் கொண்டிருப்பதும் புரிந்துகொள் ளக் கடினமான பல அம்சங்கள் நிரம்பியிருக் கும் இந்த நாட்டில் படித்தால் எதிர்காலத்தில் எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு விட முடியும் என்பதே முக்கிய தன்மையாக இருக் கிறது .மேலும்

☞ ரஷ்ய மக்கள் 100 சதவீத கல்வியறிவு பெற்றவர்கள்.

☞ உயர் கல்வியை கிட்டத்தட்ட 1304 கல்வி நிறுவனங்களும் 48 பல்கலைக்கழகங்களும் தருகின் றன.

☞ உயர் கல்விப் பிரிவில் மட்டும் கிட்டத்தட்ட 30 இலட்சம் மாணவர்கள் படிக்கிறார்கள்.

☞ அறிவியல் மற்றும் தொழில் நுட்பப் பிரிவுகளுக்கு இந்த நாடு அதிக முக்கியத்துவம் தருவ தால், மருத்துவம், கணிதம், அறிவியல், வானி யல் மற்றும் விண்கலங்கள் தொடர்பான படிப்பு களில் இன்றும் இந்த நாடு தான் உலகில் முன் னணி நாடாக திகழ் கிறது.

### கல்விமுறை

இந்த நாட்டின் கல்வி முறையை பொதுவாக 3 பிரிவுகளாகக் கூற லாம்.

1. இரண்டாம் நிலைக்கல்வி
2. உயர்கல்வி
3. பட்ட மேற்படிப்புக் கல்வி

### இரண்டாம் நிலைக் கல்வி

ரஷ்யாவின் இரண்டாம் நிலைக் கல்வி முறை பாடசாலையைப் பொறுத்து 10 அல்லது 11 ஆண்டு களில் முடிக்கக் கூடியதாக இருக்கி றது. 9வது தரம் முடித்தபின் இரண்டாம் நிலை பாடசாலையிலேயே தொடர்ந்து படிக்கலாம். அல்லது கம்யூனிட்டி கல்லூரிக ளில் பயின்று அசோசியேட் படிப்பைத் தொடர லாம். கம்யூனிட்டி கல்லூரியில் பயில்வது 3முதல் 4 ஆண்டு வரை பிடிக்கும் என்பதால் இப் படிப்புக்களை முடித்தவுடனேயே தொழிற்சா லைப் பணிக ளைப் பெறலாம்.

### பல்கலைக்கழகக் கல்வி அல்லது உயர் கல்வி

இரண்டாம் நிலைப் படிப்பு முடித்தவர்கள் பல்கலைக்கழகங்களிலும் சேர்ந்து படிக்கலாம். இங்கு அறிவியல், தொழிற்சார்ந்த படிப்புகள், மனிதவியல் படிப்புகள், சமூகப் பொருளாதா ரம் சார்ந்த படிப்புகள், தொழில்முறைப் படிப்பு கள், ஆய்வுப் படிப்புகள் என பல துறைகளில் படிக்கலாம். பகால்வர் படிப்புகள் எனப்படும் இத்தகைய படிப்புகள் மருத்துவம் தவிர ஏனைய அனைத்துத் துறைகளிலும் தரப்படுகிறது. பகால் வர் படிப்பு முடித்தவுடன் பட்டமேற் படிப்புகளைத் தொடரலாம். இத்தகைய படிப்புகள் சோவியத் யூனியன் உடைந்து ரஷ்யா தனி நாடாக மாறிய பின்பே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### பட்டமேற்படிப்புகள்

சிறப்பு அல்லது முதுநிலைப் பட்டம் படித்த வர்கள் பல்கலைக்கழகங்கள் வாயிலாகவோ அறிவியல் நிறுவனங்கள் மூலமாகவோ உயர் படிப்புகளைத் தொடரலாம். நமது நாட்டின் பி.எச்டி. படிப்புக்கு இணையான கன்டிடேட் நவ்க் எனப்படும் படிப்புகள் இத்தகைய வகையைச் சேர்ந்தது. கன்டிடேட் மற்றும் டாக்டர் பட்டம் பெற இரண்டாம் நிலைப்படிப்பு முடித்த பின்பு படிக்க வேண்டியிருக்கும். இதனால் மிகவும் இளைய அல்லது புதிதாக முடிப்பவரின் வயதே 40ஆக இருக்கிறது.

### ரஷ்ய கல்வியில் சீர்திருத்தங்கள்

சோவியத் யூனியனாக இருந்தபோது பின் பற்றப்பட்ட கல்வி முறையே இன்றும் ரஷ்யாவில் தொடருகிறது. சோவியத் யூனியனில் கல்வியா னது அனைவருக்கும் கட்டாயமாக்கப்பட்டிருந் தது. தவிர முற்றிலும் இலவசமாகத் தரப்பட்டது. நுழைவுத் தேர்வில் வெற்றிபெறும் அனைவ ருக்கும் கல்வி இலவசமாக தரப்பட்டதுடன், கல்விக்கான அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொண்டது. இது வேறு எந்த நாட்டி லும் காணமுடியாத அற்புதமான அம்சமாகும். இதனாலேயே அந்த நாட்டில் கல்வியாளர்க ளின் எண்ணிக்கை அதிகரித்ததுடன், அமெரிக் காவோடு ஒப்பிடுகையில் 6மடங்கு அதிக பட்ட தாரிகள் இருப்பதும் காணப்பட்டது. ஆனால் சோவியத் யூனியன் உடைந்து தனி நாடாக மாறிய பின், பொருளாதார ரீதியான காரணங் களால் இலவசக் கல்வியில் பெரிய நெருக்கடி ஏற்பட்டது. கட்டண முறையில் பயிற்றுவிக்கும் தனியார் கல்வி நிறுவன்ங் கள் அனுமதிக் கப்பட் டன. இருந்தபோ திலும், கல்வி முறை யில் அதிகா ரபூர்வ மாக எந்த மாற்றத்தை யும் ரஷ்யா செயல் படுத்தவில்லை.

### மதிப்பெண்முறை

ரஷ்யாவின் கல்லூரி மற் றும் பல்க லைக் கழகங்களில் புள்ளிகள் தரம் எனப்படும் முறையே பின்பற்றப்படுகிறது. நமது நாட்டிலுள்ளது போல 100க்கு இத்தனை மதிப்பெண் என்பதுபோல கணக்கிடப்பட்டு வதில்லை. மதிப்பெண் 5,4,3,2,1 என்ற 5 பிரிவுகளாகத் தரப் படுகின்றன. மிக நல்ல மதிப் பெண்ணாக 5ம் மிக மோச மான மதிப் பெண்ணாக 1ம் தரப்படுகின்றன. எனினும் 2க் குக் கீழ் மதிப்பெண்கள் பொது வாகத் தரப்படுவதில்லை. தேவைக்கேற்ப இவற்றுடன் + அல்லது - குறியீடுகள் இணைக் கப்பட்டும் மதிப் பெண்கள் தரப் படுகின்றன. பாடசாலைகள் தங்கள் வசம் இதுதொடர் பான ஆவணங்க ளைத் தனியே வைத்திருக்க வேண் டும் என்பது ஆச்சரிய மான நடைமுறையாக இருக்கிறது.

### கல்விக்கான விதிமுறை கள் மற்றும் நீடை முறைகள்

ரஷ்யா சென்று படிக்க விரும்பும் மாண வர்கள் 2 விதங்களில் பரிசோதிக்கப்ப டுகிறார் கள். மாணவர்களின் தனித் திறமையும், கல்வி யறிவும் வயதுக்கும் அனுபவத்துக்கும் ஏற்ற வாறு உள்ளதா என்பதே முதலில் அறியப்படு கிறது. உயர்கல்வி நிறுவனங்களில் சேருவ தற்கு முன்பு நுழைவுத் தேர்வு, நேர்காணல் போன்ற தேர்வு நிலைகளை ஒவ்வொருவரும் கடந்து வெற்றிபெற வேண்டியிருக்கிறது. தேர் வுகளை எழுதும் முன் நாம் அனுப்பும் முதல் நிலை விண்ணப்பங்களை ஆய்ந்த பின் தகுதி யிருந்தால் மட்டுமே தேர்வுகளை எழுத முடியும். ரஷ்ய மொழியை முதல்கட்டத்திலேயே அறிந் திருக் கவேண்டிய அவசியமில்லை. எனினும் இந்த நாட்டில் கல்வி பயில ஆர்வம் கொண்ட வருக்கு ரஷ்ய மொழி அறிந்திருந்தால் மட்டுமே தங்கிப் படிக்கும் வாய்ப்பு தரப்படுகிறது என்பது குறிப் பிடத்தக்கது.

படிப்பில் சேருவதற்கென அனுமதி திறமை இருந்தால் மட்டுமே தரப்படுகிறது. பால்வேறு பாடு, இனவேறுபாடு, மொழி வேறுபாடு, நாடு குறித்த சர்ச்சை போன்ற அம்சங்களால் இவை தீர்மானிக்கப்படுவதோ தரப்படுவதோ இல்லை.

### உயர் படிப்புக்கு என்ன தேவை?

ரஷ்யாவில் உயர் படிப்பு படிக்க முடிவு செய்து கல்வி நிறுவனத்தை முடிவு செய்த பின் கீழ்க் கண்ட ஆவணங்களை நாம் கொடுக்கவேண் டியிருக்கும். ரஷ்ய அரசினால் நிர்வகிக்கப்படும் Education in Russia for Foreigners என்னும் தளத்தில் இது தொடர்பான தகவல்க ளைப் பார்த்துக் கொள்ளலாம். தகுதி தரும் படிப்பில் நாம் பெற்ற சான்றிதழ்களின் நகல் கள், நமது பாஸ்போர்ட் நகல் மற்றும் எதில் சேர விரும்பு கிறோமோ அந்த நிறுவனத்தின் பதிலளிக்கப் பட்ட கேள்வி பதில் படிவம் ஆகியவை நாம்



சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களாகும். இந்தப் படிவத்தின் அனைத்து கேள்விகளுக் கும் நாம் விடையளிக்க வேண்டியது அவசிய மாகும். எந்தக் கல்வி நிறுவனத்தில் நாம் படிக்க அனுமதி கிடைத்துள்ளதோ அங்கு மட்டுமே நாம் விரும்பும் படிப்பைப் படிக்க முடியம். இதன் அடிப்படையில் வேறொரு கல்வி நிறுவனத்தில் சேர்ந்து படிக்க முடியாது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

R.U.பாலமுருகன்

# மாறுபட்ட பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கு கல்வி நிபுணர்கள் கூறும் ஆலோசனைகள் என்ன?

பொறியில் படிப்பகளை பொறுத்தவரை தேவைகளுக்கு ஏற்ப நாளுக்கு நாள் புதிய துறைகளும் படிப்புகளும் உருவாகி வருகின் றன. ஆனால், பெற்றோர்களோ தங்களின் குழந்தைகளை பொறியியல் படிப்புகளில் சேர்க் கும் போது, எந்த படிப்பாக இருந்தாலும் ஒன்று தான் என்று நினைக்கின்றனர். மெக்கானிக்கல், ஏரொ நாடிக்கல், ஸ்ட்ரக்சுரல், மெடலர்ஜி என எந்தப் பிரிவு படிப்பானாலும் அல்லது பி.டெக்., பி. இ என்ற பட்டங்களானாலும், ஒவ் வொரு இன்ஜினரிங் படிப்பும் தனித்தன்மை கொண்ட



வை. சிவில் இன்ஜினியர் மற்றும் எலெக்ட்ரானி க்ஸ் இன்ஜினியர் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரின் தன்மைகள் முற்றிலும் மாறுபட் வையாக இருக்கின்றன. அடிப்படையான இன்ஜி னியரிங் படிப்பு என்றால், அவை மெக்கானிக் கல், சிவில், எலெக்ட்ரானிக் மற்றும் கெமிக்கல் இன்ஜினியரிங் படிப்புகள்தான் ஆனால்காலத் தின் வளர்ச்சிக்கேற்ப புதிய வகை இன்ஜினிய ரிங் படிப்புகளும் உருவாகியுள்ளன. இவை அடிப்படை இன்ஜினியரிங் படிப்புகளின் மாறு பட்ட வடிவங்களாகும்.

### ஏரோநாடிக்கல் இன்ஜினியரிங்

விமான வடிவமைப்பு, மேம்படுத்தல் உற்ப த்தி செய்தல் மற்றும் விமானங்களை பழுது பார்த்தல், பராமரிப்பு போன்றவற்றோடு தொடர் புடையது ஏரோநாடிக்கல் இன்ஜினியரிங் பிரிவு, மேலும், விண்கலம், சாட்டிலைட், ஏவுகணைகள் பற்றிய பிரிவுகளில், இதை படிப்பவர் தம்மை மேம்படுத்திக் கொள்ளமுடியும் விமான சேவை தரும் பிறநிறுவனங்கள், ஏரோநாடிக்கல் இன்ஜி னியர்களை பணிக்கு அமர்த்தினாலும் பொது வாக அவற்றின் விமானங்களை ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜினியர்களே பராமரிக் கின்றனர். இத்துறையில் சிறந்து விளங்குவதற்கு நல்ல உடல்திறன், புதுமையாக சிந்திக்கும் தன் மை பிரச்சினைகளை இலகுவாக கையாளும் திறன் போன்றவை அவசியாகிறது. சில மாண வர்கள் ஏரோநாடிக்கல் பிரிவு படித்தால் தான் பைலட் டாக முடியும் என தவறாக நினைக்கிறார் கள். உண்மையில் பைலட் ஆவதற்கு இது ஒரு கூடுதல் தகுதியாக மட்டுமே கருதப் படுகிறது.

### ஏரோஸ்பேஸ் இன்ஜினியரிங்

ஏரோநாடிக்கல் மற்றும் ஏரோஸ்பேஸ் இரண் டும் ஒன்றே என்றும் பலரும் நினைக்கின் றனர். ஆனால், இவை மாறுபட்ட துறைகளாகும். ஏரோ நாடிக்கல் படிப்புகளில் சம்பந்தப்பட்ட வானூர்தி கள், வளிமண்டலத்திற்கு உட்பட்டவை ஏரோஸ் பேசுடன் தொடர்புடைய வானூர்திகளோ வளி மண்டலத்திற்கு வெளியேபறக்குக் கூடிய வை. பொதுவாக இத்துறையை பாக்கெட் அறிவி யல் என்று கூறுவது வழக்கம். இத்துறையை தேர்ந் தெடுத்துபடிப்பவர்களிற்கு வான்வெளி ஆய்வு டன் தொடர்புடைய நிறுவனங்களில் வேலை கிடைக்கிறது. அதிக நேரம் பணிபுரிய விருப்பமுள் ளவர்களும் ஆய்வுத்துறையில் ஈடுபாடுடைய வர்களும் இப் பிரிவைத் தேர்ந்தெடுக்கலாம்.

### ஏவியானிக்ஸ்

ஒரு விமானத்தின் எலெக்ட்ரானிக்ஸ் தொடர்பு டைய இந்தப் படிப்பானது இத் துறையில் புதிய படிப்பாகும். ஒருவிமானம் அல்லது விண்கலம் பறக்க உதவும். ஹார்ட்வெயார் மற்றும் சொப்ட் வெயார் படிப்புகள் ஏவியானிக்ஸ் எனப்படுகிறது. இன்று பயணிகள் விமானங்களிலும் இராணுவ விமானங்களிலும் மனித தலையீடு அதிகம் தேவைப்படாமல், கொம்ப்பியூட்டர்களே அந்தப் பணிகளை மேற்கொள்கின்றன. விண் கலகங் களுக்கென்றே பிரத்தியேகமான சொப்ட்வெ யார்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஏரோநாடி க்கல், தகவல் தொழில்நுட்பம், கொம்ப்யூட்டர் சலன்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் படித்தவர்கள் இப் பிரி வுக் கு பொருத்தமாக இருப்பார்.

இத்துறையில் வல்லுநர்கள் குறைவு என்ப தால், தரப்படும் சம்பளம் அதிகமாகவும், கவர்ச்சி கரமாகவும் இருக்கிறது. வெளிநாடுகளில் இதை படித்தவர்களுக்கு அதிக தேவை இருக்கிறது. தீவிரமான சிந்தனை ஆற்றலும் எலெக்ட் ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ். கொம்ப்யூட்டர் திறன்களை ஒருங் கிணைத்து பணியாற்றும் திறன் பெற்றுவரும் இத்துறைக்கு பொருத்தமானவர்கள்.

### ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜினியரிங்

விமானத்தின் ஆய்வு, பராமரிப்பு பிரச்சினை களுக்கு தீர்வுகாண்பது போன்ற துறைகளுடன் இந்தப்பிரிவு தொடர்புடையது. ஒவ்வொரு விமான மும் பறப்பதற்கு முன் பறக்க தகுதியானது என்ற சான்றிதழைப் பெற்றால் மட்டுமே விண்ணில் ஏறமுடியும். இந்த சான்றிதழை தருவது ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ் இன்ஜினியர்கள் தான். பி.இ. அல்லது பி.டெக். பட்டமாக இது தரப்படுவதில்



லை. சிந்தனைகளைப் பற்றி ஆராய் வதை விட செய லில் ஈடுபாடு காட்டு வோருக்கான துறை இது. இருந்தாலும் இயல்பியலில் நல்ல ஆர்வ மும், ஈடுபாடும் இருப்பவர் இதற்குமிகவும் பொருத் தமானவராக இருப்பார். இத் துறையில் வெற்றி கரமாக செயல்பட, மற்றொரு அவசியத் தேவை சிறப்பான உடல்திறன் தான். மேலும், எங்கும் சென்று பணியாற்றத் தயாராக இருக்கும் மனப் பாங்கும் அவசியம் தேவைப் படுகிறது.

### ஓட்டோமொபைல் இன்ஜினியரிங்

சாலைகளில் செல்லும் மோட்டார் வாகனங்க ளின் வடிவமைப்பு, ஆராய்ச்சி, உற்பத்தி மற்றும் பராமரிப்பு தொடர்புடையது இந்தத்துறை. இதில், இரண்டு சக்கரவாகனங்கள், கார், டிரக் பேருந்து, டிராக்டர் உள்ளிட்ட அனைத்து வாகனங்களைப் பற்றிய படிப்பாக இது இருக் கிறது. இன்று பல பன் னாட்டு நிறுவ னங்களோடு இணை ந்து செயல் படும் ஓட்டோமொபைல் நிறுவனங்கள் பெருகி வருகின்றன. ஹுண்டாய், ஹோண்டா, ஃபோர்டு போன்ற நிறுவனங்களில் எண்ணற்ற பணி வாய்ப்புகள், இதை முடிப்பவருக்குகிடைக்கின்றன. இதில், சிறப்பாக செயற்பட மெக்கானிக் கல்திறன் களும், நல்ல உடல் திறனும் அவசியம். ஊக்க மான சிந்தனை கொண்டவர்கள் இத் துறையி லேயே வடிவ மைப்பு பிரிவில் பணியாற் றலாம். மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவு படித்தவர் களும், அதற்கு பின் இத்துறையில் சிறப்பு படிப்பு படித்தபின் இதற்கு மாறிக்கொள்ள முடியும்.

# சிறுதானியப் பயிர்ச் செய்கையும் காரைநகர் விவசாயிகளின் பிரச்சினையும்

நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட காரை நகர் ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேச மாகும். இங்கு 1996ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமரத் தொடங்கிய காலம் முதல் தமது பரம்பரை சுயதொழிலை மீளவும் ஆரம்பித்து வாழ்ந்து வருகின்றார். இங்குள்ள மக்களின் பொருளாதார வளமாக கடற்றொழில், விவசாயம், வர்த்தகம் போன்றன காணப்படுகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் எவ்வாறு உழைத்தாலும் வாழ்க்கைச் சக்கரத்தை சுழல விடுவது மிகவும் கஷ்டமான விடயமாகவே உள்ளது.

இந் நிலையில் கடந்த வருட பெரும்போக பயிர்ச்செய்கை அமோக விளைச்சலைத் தந்திருந்தமை அனைத்து விவசாயிகளினதும் முகத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் அறுவடையின் போது பெய்த கடும் மழை காரணமாக பலரது விளைச்சல் பாதிக்கப்பட்டிருந்தது. அதாவது வெட்டிய கதிர்கள் மழையில் நனைந்தன. அடுக்கிய சூடுகள் நீரில் மூழ்கின. இவ்வாறு பல விதமாக பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இந் நிலையிலும் மழை ஈரலிப்பினைக் கண்ட விவசாயிகள் இம் முறை சிறுதானியப் பயிர்ச் செய்கை மேற்கொண்டனர். மழை சிறு தானியப் பயிர்ச்செய்கைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தாலும் அடிக்கடி பெய்தமை பெரும் சவாலாக அமைந்தது எனலாம். அதனையும் மீறி பல விவசாயிகளிற்கு சிறு தானியங்களான எள்ளு, பயறு, உழுந்து, கௌப்பி, என்பன முனைத்திருந்தன. தற்போது பன்மடங்காக விலைவாசிகள் அதிகரித்துள்ளமை ஒரு புறமிருக்க இலங்கை தீவினைப் பொறுத்தளவில் பல நாடுகள் நெல், அரிசி உட்பட்ட உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய தடை விதித்துள்ளன. ஆதலால் விலைகளின் உயர்வு ஒரு புறமிருக்க உணவுப் பொருட்களிற்கான தட்டுப்பாடு ஏற்படவும் வழியேற்றப்பட்டுள்ளது.

### அழிவினை ஏற்படுத்தும் கால் நடைகள்

இந் நிலையில் விளைந்த சிறுதானியப் பயிர்களை கட்டாக்காலி கால் நடைகள் அழித்து வருகின்றன. காரை நகரில் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் விளை நிலங்கள் இருந்த போதும், கால் நடைகளின் ஆதிக்கத்தினால் பல விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட ஆர்வம் காட்டவில்லை.

காரைநகரில் காரை மேற்கு, காரை வடக்கு, காரைகிழக்கு, காரை தெற்கு, காரை மத்தி என ஐந்து கமக்காரர் அமைப்புக்கள் காணப்படுகின்றன. கமநல சேவை நிலையத்தினரால் மேற்படி கமக்கார அமைப்புக்களிலூடாகவே பெரும் போக நெற் செய்கையின் போது கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

ஆனால் சிறுபோக பயிர்ச்செய்கையின் போது கமநல சேவை நிலையம், இதனை ஒழுங்கு செய்யத் தவறிவிட்டது. இதனால் காரை மேற்கு விவசாய சமமேளன பிரிவு தவிர்த்த ஏனைய நான்கு பிரிவுகளிலும் சிறுதானியப் பயிர்ச் செய்கைகள் கைவிடப்பட்டன அல்லது கால் நடைகளால் சேதமாக்கப்பட்டன எனலாம்.

காரைநகரிலும் சுமார் ஆயிரத்து இருநூறு ஏக்கர் விளை நிலத்தில் தற்போது காரை மேற்கு விளை நிலயத்திலேயே சிறுதானியப் பயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேற்படி விவசாயிகள் தமது பயிர்களை பாதுகாப்பதற்காக தற்போதைய நாட்டு நிலைமையிலும் வயல்களிலே இரவு பகலாக காவல்காத்து வருகின்றனர். இவ்வாறு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயி கருத்துத் தெரிவிக்கும் போது, தங்களால் பிடிக்கப்படும்கால்நடைகளை உரியவர்கள் பிடியாளர் கட்டணத்தைச் செலுத்தி பெற்றுச் செல்கின்றனர்.

**தொகுப்பு:-கற்பகன்**

ஆனால் சேதப்பட்ட பயிருக்கு எந்த வித நட்டஈடும் பெறமுடியாதுள்ளது. இதனை உரிய அதிகாரிகளிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கவுள்ளோம் என தெரிவித்தனர். இன்னமும் சுமார் ஒரு மாதமாவது கால்நடை களைக் கட்டுப்படுத்தினால் காரைநகரின் குறித்த சிறுதானிய தேவையென்றாலும் ஈடுசெய்ய முடியும். இதற்கு கால் நடை சொந்தக்காரர்கள், விவசாயிகள் மட்டுமல்ல சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கட்டாயம் இன்றியமையாதது என்பதுடன் இது அவரவர் கடமையுமாகும்.

## மாகாண சபைத் தேர்தலுக்கு முன் சிறுவர்களை விடுவிக்க த.ம.வி.பு.உறுதி

(கொழும்பு)

மே 10ஆம் திகதி மாகாண சபைத்தேர்தலுக்கு முன் தங்கள் அணியில் உள்ள சிறுவர்கள் அனைவரையும் விடுதலை செய்யவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் உறுதியளித்துள்ளனர். தங்கள் அணியில் 48 சிறுவர்கள் இருப்பதாக கட்சியின் பேச்சா ளர் அசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

இவர்கள் பாதுகாப்புக்காரணங்களால் வந்தவர்கள் என்றும் இவர்கள் எவருக்கும் இராணுவப்பயிற்சி வழங்கப்படவில்லை எனவும் மௌலானா தெரிவித்துள்ளார்.

மேலும் 7 சிறுவர்கள் இருப்பதாகவும் அவர்களும் தேர்தலுக்கு முன் விடுவிக்கப் படு வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இது ஒரு அரசியல் மைல்கல்லாகவோ அல்லது சர்வதேச அழுத்தங்களுக்காகவோ இதை நாங்கள் செய்யவில்லை. சிறுவர் களை படையில் சேர்த்துக்கொள்வதாக குற்றச் சாட்டுக்கள் உள்ளன. இதனால் அரசும் சங்கடங்களுக்குள்ளாகியுள்ளது. அதனால் நாங்கள் இச் சிறுவர்களை விடுதலை செய்கிறோம் என மௌலானா தெரிவித்துள்ளார். 28 சிறுவர்கள் விடுதலை செய்யப்பட்டமையை யுனிசெப் அமைப்பும் பாராட்டியுள்ளது. (அ-5)

## இலங்கை அகதிகளுக்கான நிதியுதவி இரண்டு மடங்கு அதிகரிப்பு

(சென்னை)

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகளுக்கான நிதியுதவி இரண்டுமடங்காக அதிகரிக்கப்படும். முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்படவுள்ளன என தமிழக அரசின் வரவு செலவுத்திட்ட பரிந்துரையில் நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கைத்தமிழர் பிரச்சினையை மத்திய அரசு தான் கையாளவேண்டும். பிறந்தமண்ணில் வாழ வழியின்றி பல ஆண்டுகளாக இலங்கைத்தமிழர்கள் சந்தித்து வரும் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதியான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றே அரசு விரும்புகிறது. இதனை நிறைவேற்றக்கூடிய பொறுப்பும் அதிகாரமும் மத்திய அரசிடம் தான் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (அ-5)

# கிழக்கில் ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்தஅனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி

## அமைச்சர் லக்ஷ்மன் யாப்பாஅபேவர்தன அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஜனநாயக ரீதியில் நடாத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைகளத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அமைச்சர் மேலும் கூறியதாவது,

தேர்தலுக்காக 20 ஆயிரம் பாதுகாப்புப் படையினர் அப்பிரதேசத்துக்கு அனுப்பப் பட்டுள்ளனர். அத்துடன் மேலதிகமாக 40 பாதுகாப்புக் குழுக்களும் அங்கு நியமிக்கப் பட்டுள்ளன. அரசின் முயற்சியினால் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துள்ள பிள்ளையான் குழுவினர் தம்முடைய படைப்பிரிவிலுள்ள சிறுவர்களை முதற்கட்டமாக விடு தலை செய்துள்ளனர். இரண்டாம் கட்டமாக இன்னுமொரு குழுவினரை விடுதலை செய்யவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த தேர்தல் நியாயமான முறையில் நடைபெறுமென அரசாங்கத்துக்குப் பாரிய நம்பிக்கை இருக்கிறது. ஜனநாயகமான முறையில் அதனை நடத்த வேண்டிய அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-5)

# சர்வ கட்சிக் குழுவின் புதிய திட்டத்திற்கு ஜே.வி.பி கடும் கண்டனம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு பெரிய வெள்ளி ஒப்பந்த அடிப்படையில் தீர்வு யோசனைகளை சமர்ப்பிக்கும் சர்வ கட்சிக்குழுவின் திட்டத்திற்கு ஜே.வி.பி கண்டனம் தெரிவித்துள்ளது.


இங்கிலாந்திற்கும் அயர்லாந்திற்கும் விஜயம் செய்துவிட்டு திரும்பிய தலைவர் திஸ்ஸ விதாரன உள்ளிட்ட குழுவினர் தெரிவித்த ஒற்றையாட்சியும் சமஷ்டியும் கலந்த ஒரு அரசியல் தீர்வு என்பது மக்களை முட்டாளாக்கும் ஒரு சதி என ஜே.வி.பி. எம்.பி விஜிதஹேரத் தெரிவித்தார்.

இதேவேளை தனது பிரேரணை ஒற்றையாட்சியும் சமஷ்டியும் கலந்த கலவை அல்லவென தெரிவித்த அமைச்சர் திஸ்ஸ விதாரன தனது பிரேரணை ஒற்றையாட்சி அமைப்புக்குள் அதிகாரப் பரவலாக்கல் முயற்சி என தெரிவித்தார். (அ-5)

# மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் நீங்க அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையில் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்த வண்ணம் உள்ளது. யுத்த நிலைமைகள் இருக்கும் வரை மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இல்லாதொழிக்க யுத்தம் நிறுத்தப் பட்டு அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா டென்மார்க்கின் மனித உரிமைகளுக்கான வெளிவிவகார அமைச்சின் உயர் ஸ்தானிகர் ஹான்ஸ் குறூனெற்றுக்குக் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள டென்மார்கின் மனித உரிமைகளுக்கான வெள்விவகார அமைச்சின் உயர் ஸ்தானிகர் ஹான்ஸ் குறூனெற் கடந்த வெள்ளிக்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச் சருமான டக்ளஸ் தேவ வானந் தாவைச் சந்தீத்து இலங்கையின் மனிதஉரிமைவிவகாரங்கள் குறித்து கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சில் இச் சந்திப்பும் இடம் பெற்றது. மேற்படி சந்திப்பில் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து சர்வதேச சமூகம் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் பார்வை குறித்தும் இலங்கையின் சம கால அரசியல் விவகாரங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி. கட்சியானது அரசியல் ரீதியாக அரசியல் உரிமைப்பிரச்சினைக்கு தீர்வு காணப் படவேண்டும் என்பதையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

இதற்கமைய கட்சியினால் முன்மொழியப் பட்டுள்ள 3கட்ட அரசியல் தீர்வுத்திட்டமானது நடைமுறைச்சாத்தியமானது. மூன்று கட்ட அரசியல் தீர்வுத்திட்டத்தின் முதல் கட்டமானது தற்பொழுது அமுல் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. இதனைத் தொடர்ந்து சம காலத்தில் வடக்கிற்கும் ஒரு ஆலோசனைச் சபையை ஏற்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் இதன் இறுதிக் கட்ட யோசனைகள் சர்வகட்சி மாநாட்டில் முன் வைக்கப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுவதாக நீண்ட காலமாக முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகளே தற்பொழுது முதல் கட்டமாக அமுல்படுத்தப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார். (அ-5)

# வெளிநாட்டுத் தலையீடுகளால் தேசிய பிரச்சினை மிகவும் மோசமடைந்துள்ளது-ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிநாட்டுத் தலையீடுகளால் இலங்கையின் தேசிய பிரச்சினை மிகவும் மோசடைந்திருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்திருக்கும் டென்மார்க் வெளி விவகார அமைச்சின் மனித உரிமைகள் விவகாரத்தின் தலைவர் ஹான்ஸ் ஹனட்டேயைச் சந்தித்தபோதே ஜே.வி.பியின் தலைவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். கடந்த காலங்களில் இந்தியா,விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கியும் அவர்களின் கருத்துக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியும் உதவியதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

பெரும்பாலான வெளிநாட்டு அமைப்புக்கள் விடுதலைப் புலிகளையும் அரசாங்கப் படைகளையும் சம நிலையில் வைத்து நோக்குவதாகவும், அவ்வாறானநடவடிக்கைபிழையானது எனவும் சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார்.

தமிழ் நாட்டில் இடம் பெயர்ந்திருக்கும் இலங்கை அகதிகள் குடியுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு ஜே.வி.பி ஆதரவு வழங்கி வருவதாகவும் ஜே.வி.பியின் தலைவர் டென்மார் வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைகள் விவகாரங்களின் தலைவரிடம் விளக்கிக் கூறியுள்ளார்.

அதேவேளை விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கும் சதித்திட்டத்தினை இந்தியா தலைமையிலான மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வருவதாகவும் இந்தச் சதித்திட்டத்துக்கு இலங்கை அரசாங்கம் சோரம் போயிருப்பதாகவும் ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஒற்றையாட்சியும் சமஷ்டியும் கலந்த புதிய தீர்வினை முன்வைக்கப் போவதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் விஜித்த ஹேரத் இத்தகைய தீர்வு முன்வைக்கப்படுமானால் அதற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடி அதனைத் தடுத்துநிறுத்தப் போவதாக எச்சரித்துள்ளார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட போதும் மறைமுகமாக ஆதரவு வழங்கி வருகிறது. அமெரிக்காவும் இது போன்ற இரட்டை வேடத்தை போடுவதுடன் நோர்வே உட்பட மேற்குலக நாடுகளும் இதே நாடகத்தையே அரங்கேற்றுவதாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் விஜித்த ஹேரத் கூறியுள்ளார். (அ-5)

நீரின்று அமையாது உலகெனின்
யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு
–திருக்குறள்

வலம்புரி

## குடாநாட்டின் நீர்வளம் பேணும் திட்டங்கள் அமுலாக வேண்டும்

இயற்கையின் படைப்பு மனிதனுக்காயினும் அதனைப் பாதுகாக்கும் கடமை மானிட சமூகத்துக்குரியதென்பதை எவரும் மறந்து விடலாகாது.

உலகம் முழுவதும் இயற்கை வளங்களை – சூழலைப் பாதுகாக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளன.

இதற்கு பாலியில் நடைபெற்ற பசுமைப் பொருளாதாரத்தைக் (Green Economy) குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இயற்கை வளங்களையும் நாம் சார்ந்த புறச் சூழலையும் பாதுகாக்கத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் எதிர்கால மானிட வாழ்வுக்கு கெடுதி விளைவிப்பதாகவே அமையும்.

அதிலும் குடிநீர்ப் பிரச்சினை எதிர்காலத்தில் தலை தூக்கக்கூடிய பாரிய பிரச்சினை ஆகும்.

நிலக்கீழ் நீர் உவரடைதல் மற்றும் மழைநீர் வழிந்தோடி கடலுடன் கலக்கும் தன்மை ஆகியன குடிநீர் பிரச்சினையைத் தோற்றுவிக்கக் கூடியன.

எனவே எதிர்கால சந்ததியின் குடிநீர்த் தேவைக்கான கிடைப்பனவை உறுதிசெய்ய வேண்டிய பொறுப்பு எம்முடையதாகும்.

சமகாலத்தில் நீரைப் பாதுகாக்கும் பணியை செய்யாத விடத்து குடாநாட்டில் குடிநீர் பிரச்சினை பெரும் சவாலாக இருக்கும் என்பது சர்வ நிச்சயம்.

இது விடயத்தில், யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் உவர் நீர் தடுப்பணைகளை அமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளதான தகவல் திருப்தி தருவதாக உள்ளது.

அதேநேரம் தொண்டைமானாறு ஏரித்திட்டம் – வழுக்கையாற்றுத் திட்டம் போன்றன பலமில்லியன் ரூபாய்களில் முன்னெடுக்கப்படவுள்ளமையும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

எனினும் யாழ். மாவட்டத்தில் இயங்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணி இருக்கின்ற போதிலும் தனியான கட்டடத் தொகுதி இல்லாமை பெரும் குறைபாடாகவே உள்ளது.

திணைக்களங்கள் பௌதிக வளங்களை கொண்டிருக்கும்போதே அங்கு பணியாற்றுவோர் விருப்புடனும் மனநிறைவுடனும் தமது பணியை செம்மையாகச் செய்ய முடியும்.

போதுமான வசதிகளும், வளங்களும் இல்லாத நிலையில் குறித்த அமைப்பிடம் இருந்து முழுமையானதும், திறமையானதுமான வினைத்திறனை பெற்றுக் கொள்ளமுடியாமல் போகும்.

எனவே, யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சகல வசதிகளுடனும் கூடிய கட்டடத் தொகுதியை அமைத்துக் கொடுப்பது உயர் அதிகாரிகளினதும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைபுக்களினதும் தலையாய கடமையாகும்.

குறிப்பாக நிக்கொட் (NECORD) போன்ற அமைப்புக்கள் நீர்பாசனத் திணைக்களக் கட்டடத் தேவைக்கு உதவ்வதும் அதன் மூலம் யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தை பாதுகாக்கும் திட்டத்தை முன்னெடுக்கவும் உதவ முன்வர வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# மனித உரிமை மீறல்களை கட்டுப்படுத்தாவிடின் முன்னுரிமை சலுகை முறையை இழக்க நேரிடும்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

மோசமடைந்திருக்கும் மனித உரிமைகளின் பின்னணியில் காணப்படும் விடயங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் கடும்போக்கைக் கடைப்பிடித்துவந்தால் முன்னுரிமை சலுகை முறையை (GSP+)இழக்கவேண்டி ஏற்படுமென ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்புக் குழுவினர் கடந்த சில நாட்களாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மனித உரிமை செயற்பாட்டாளர்களைச் சந்தித்த பின்னரே இந்த எச்சரிக்கை யை விடுத்துள்ளனர். மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்து வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்தின் கடும் போக்கான நிலைப்பாடானது இலங்கைக்கு வழங்கப்படும் முன்னுரிமை சலுகை முறையை இழப்பதற்கு காரணமாக அமைந்து விடும் என் பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கையின் மனித உரிமை விடயங்கள் உள்ளிட்ட விடயங்களைக் கண்காணித்து தகவல்களைத் திரட்டும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கை வந்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேச சுயாதீன நிபுணர்கள் குழு நாட்டைவிட்டு வெளியேறவுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளமை இங்கு முக்கியம் பெற்றுள்ளது.

(அ-5)

# தேர்தல் நீதியாக நடத்தப்பட்டால் கண்காணிப்பாளர்கள் அவசியமில்லை

## பவ்ரல் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் நடத்தப்பட்ட தேர்தல்கள் நீதியானதும், சுதந்திரமானதுமாக நடத்தப்பட்டு இருந்தால் தேர்தல் கண் காணிப்பாளர்கள் தேவையில்லையென பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிகோ கூறியுள்ளார்.

நடைபெற இருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். மக்களின் வாக்களிக்கும் உரிமை தொடர்பாக நீதித்தன்மை கடைப்பிடிக்க வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட 58 கட்சிகள் இருக்கின்ற போதும் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் மத்தியிலேயே அதிகாரங்கள் பரவிக் காணப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பவ்ரல் அமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்படுகிறது என முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச் சாட்டை மறுத்திருக்கும் கிங்ஸ்லி றொட்றிகோ, இதேபோல் கடந்த காலத் தேர்தல்களில் எதிர்க்கட்சிக்கு ஆதரவு வழங்குவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டதாகவும் கூறினார்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக 25 தேர்தல்களில் கண்காணிப்புக்களை மேற்கொண்டுள்ளோம். பக்கச் சார்பற்ற தன்மையை கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரேயொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தமது அமைப்பு என றொட்றிகோ தெரிவித்துள்ளார்.

அரசியல் அமைப்புச் சபையை அமைப்பதில் அரசாங்கம் காலத்தை இழுத் தடித்து வருவதை கண்டித்திருக்கும் கிங்ஸ்லி றொட்றிகோ சுயாதீன ஆணைக்குழுவை அமைத்தாலே அதன் மூலம் நீதியான தேர்தலை உறுதிப்படுத்த முடியும் என ஊடகவியலாளர் மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது வரை கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக 18தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டிருப்பதாக பவ்ரல் அமைப்பின் தலை வர் கிங்ஸ்லி றொட்றிக்கோ மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-5)

# ஒரு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் நிலை

## உலக உணவுத்திட்ட வதிவிடப்பிரதிநிதி எச்சரிக்கை

(கொழும்பு)

உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் ஒரு மில்லியன் மக்கள் பட்டினியால் வாடும் நிலை உருவாகும் என்று ஐ.நா.உலக உணவுத்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி மொஹ மட்சாலி ஹீன் எச்சரித்துள்ளார்.

நிலைமையை சமாளிக்க கொடையாளி நாடுகள் விரைந்து உதவ முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவர் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு உள்ள மாற்று வழிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து உலக உணவுத் திட்டத்தின் வதிவிட பிரதிநிதி மொஹமட் சாலிஹீன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் உள்நாட்டு மோதலினால் பாதிக்கப்பட்ட சுமார் ஒரு மில்லியன் மக்கள் ஐ.நா உலக உணவுத்திட்டத்தின் நிவாரணப் பொருட்களிலேயே தங்கியுள்ளனர்.

இடம் பெயர்ந்த மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களே இதில் பெரும்பான்மையாக உள்ளனர். குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலேயே இம் மக்கள் வாழ்கின்றனர். 2008 ஆம் ஆண்டுக்கான எமது செயற்பாடுகளுக்காக சுமார் 64 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது உணவுப் பொருட்களின் விலை 50 சதவீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது.

இதனால் உலக உணவுத்திட்டத்தின் கொழும்பு தலைமை அலுவலகம் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது. அத்தோடு உணவுப்பொருட்களுக்கு நிலவும் தட்டுப்பாடு காரணமாக எமது பணிகள் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. எனினும் தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் மட்டும் இப்பிரச்சினை காணப்படவில்லை. ஏனெனில் முழு உலகமும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டினாலும் விலை உயர்வாலும் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முகங்கொடுத் துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதியில் மாதாந்தம் 9200 தொன் உணவுப் பொருட்களுக்கான தேவை உள்ளது. எனினும் தற்போதைய நிலையில் அங்கு மாதாந்தம் 6000 தொன் உணவுப் பொருட் களே அனுப்பப்படுகின்றன. இந்தப் பிரச் சினை தொடருமானால் எமது பணிக ளில் சிக்கல் ஏற்படும்.

இதனால் உலக உணவுத் திட்டத்தின் நிவாரணப் பொருட் களில் தங்கியுள்ள சுமார் ஒரு மில்லியன் மக்கள் நேரடியாக பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(அ-5)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினரால் புன்னாலைக் கட்டுவன் வடக்கு திடப்புலம் நரசிங்க வைரவ ஆலய மகோற்சவ காலங்களில் நடாத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவின் ஒழுங்கில் நாளை செவ்வாய்க்கிழமை ஆலய வழிபாட்டுமுறை என்னும் தலைப்பில் சைவப் புலவர் சைவசிந் தாந்த பண்டிதர் சத்திதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(அ-7)

**ஓலைச் சுவடிகள் 21**

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

### நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

**கோயிலை வலம் வருவது எதற்கு?**

கோயில் தரிசனத்துக்குப் போகும் இளைஞர்களிடம், பெரியோர்கள் 'கோயிலை வலம் வர மறந்து விடாதே' என்று கூறுவதுண்டு. கோயிலை வலம் வரவேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கூறுவர். இதன் பின்னால் சிறப்பான ஓர் அர்த்தமும் சாஸ்திரமும் உண்டு.

காலையும், மாலையும் பொதுவாக உடற்பயிற்சி வேளைகளாக நாம் பழக்கப்படுத்தியுள்ளோம். இதைச் செய்ய இயலாதோருக்கு கோயில் தரிசனமும் கோயிலை வலம் வருவதும் நல்ல உடற்பயிற்சியாக அமையும். சிறியோருக்கும் பெரியோருக்கும் எளிதில் செய்யக் கூடிய உடற்பயிற்சியே கோயிலை வலம் வருதலாகும். வலம் வருதல், தோப்புக்கரணமிடல், விழுந்து கும்பிடுதல் முதலியவை உடற் பயிற்சியின் சக்தியை அதிகரிக்கின்றது. நம்மையறியாமலே உடலிலுள்ள எல்லா மூட்டுக்களும், தசைகளும் நன்றாக அசைவடையும் ஓர் உடற்பயிற்சியையே கோயில் தரிசனத்தில் நாம் செய்கின்றோம்.

வலம் வருதல் என்பது வலதுபக்கம் சுற்றி வருதலையே குறிக்கும். பொதுவாக கோயிலை வலம் வருவது வலது பக்கமாகத்தான். இப்படிச் செய்வதால் நாம் இறைவனுடன் கூடுதல் நெருக்கமடைகின்றோம் என்பது ஆசாரியார்களின் கருத்து. கோயிலை வலம் வருதலால் முன் ஜென்மங்களில் செய்த பாவங்கள் அழிந்து விடும் என்பது நம்பிக்கை.

## மடுவை பொறுப்பேற்பது...

இராணுவத்தின் இணையத்தளம் கூறுவது போல தாங்கள் இன்னமும் ஆலயத்தின் பொறுப்பை ஏற்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆலயத்தை பொறுப்பேற்பதும் மாதாவின் திருச்சொரூபத்தை மீண்டும் மடுஆலயத்தில் நிறுவுவது ஆகியவை இரண்டும் வெவ்வேறு விடயங்கள் என்றும் இன்று நடைபெறவுள்ள கூட்டத்தில் ஆலயத்தை பொறுப்பேற்பது மட்டுமே ஆலோசிக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி தமிழோசையிடம் பேசிய அவர், ஆலய வளாகத்துக்குள் சீருடையில் ஆயுதம் தாங்கிய துருப்புகளின் நடமாட்டத்தை தாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் ஆலயம் அமைந்திருக்கும் பகுதியை பாதுகாப்பு வலயமாக அறிவிக்க இராணுவம் முயற்சி எடுத்தால் அதற்கு தாங்கள் தடையாக இருக்க மாட்டோம் என்றும் கூறினார். (ச-2)

## இராணுவ இரகசியங்களை...

அவர் கூறினார்.

இராணுவ இரகசியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதன்போதே யுத்த களத்தில் எமது படையினர் வெற்றி இலக்கை அடைய முடியும்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் அரசாங்கத்தை பாதுகாப்பதற்கும் பாராட்டுக்களைப் பெறுவதற்காகவும் படையினர் முன்னெடுக்கவுள்ள யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களில் பக்கம் பக்கமாக தகவல்களை வழங்குகின்றனர். இதன் காரணமாகவே எமது நாட்டை காக்கும் படையினர் அநியாயமாக உயிரிழக்கின்றனர் என்றார். (ச)

## மணலாற்றில் பல மணி...

உதய நாணயக்கார தெரிவித்தார்.

இதேவேளை இந்தப் பகுதிகளை நோக்கி புலிகள் ஷெல் தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர். மோதல் மற்றும் ஷெல் தாக்குதல் குறித்து இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது ,

விடுதலைப் புலிகள் முல்லைத் தீவுப் பிரதேசத்தில் இருந்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர். இந்த ஷெல் தாக்குதல்களை அடுத்து இராணுவத்தினரால் பதில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

படையினரின் பதில் தாக்குதல்களைத் தொடர்ந்து இரு தரப்பினர்களுக்குமிடையில் பலமணி நேரங்கள் வரை கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இம் மோதல்களின் போது 7 இராணுவத்தினர்கொல்லப்பட்டதுடன் மேலும் 13 பேர் படுகாயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகளால் ஏவப்பட் ஷெல்கள் மணலாறு ஜானகபுரம் வடக்கு, சிங்கபுரம் , கல்குளம் கிராமங்களின் மீது வீழ்ந்து வெடித்துள்ளன. ஆயினும் அக்கிராம மக்களுக்கோ அல்லது அங்கு அமைக்கப்பட்டுள்ள படை முகாம்களுக்கே எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

இதனைத் தொடர்ந்து இரு தரப்பினர்களுக்கும் இடையில் மணலாறு ஜானகபுரம் வடக்கு, பதவியா, கிரிஇப்பன்வெல மற்றும் பராக்கிரமபுரம் போன்ற இராணுவ முன்னரங்கு நிலைகளில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன.

இம் மோதல்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் முகமாக மணலாறு வடக்கு விடுதலைப் புலிகளின் தளம் மீது விமானப் படையினரால் விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலால் விடுதலைப் புலிகளின் ஆட்டிலறித் தளமொன்று அழிக்கப்பட்டது.

அத்துடன் படையினரால் தொடர்ந்தும் தரைவழித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

தாக்குதல்களை அடுத்த அப்பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரது சடலம் உட்பட ஆயுதங்கள் சில படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

### புலிகள் அறிவிப்பு

இதேவேளை மணலாறு பகுதியில் படையினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சிகள் முறியடிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

மணலாறு மண்கிண்டிமலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இருந்து தாக்குதல்களை மேற்கொண்ட படையினர் விடுதலைப் புலிகளின் முன்னணி நிலைகளை நோக்கி முன்னகர்வு முயற்சிகளை மேற்கொண்டனர்.

இதனை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் பலத்த தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதன்போது படையினருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் முன்னேற்ற முயற்சிகளையும் கைவிட்டு விட்டு படையினர் பழைய நிலைகளுக்கு பின்வாங்கிச் சென்றனர் என்று புலிகள் தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச)

## இராணுவ நிலைகள் மீது...

மணலாறு இராணுவ முன்னரங்க பகுதிகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை விமான குண்டுத்தாக்குதல்களை நடத்தியிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது.

இந்தத் தாக்குதல் குறித்து தகவல் வெளியிட்ட இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் உதய நாணயக்கார, நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.43 மணியளவில் விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் வெலிஓயா பகுதியில் உள்ள இராணுவ முன்னரங்குகள் மீது 3 குண்டுகளை போட்டதாகவும் அங்கு தரையில் இருந்த படையினர் அந்த விமானங்களை நோக்கித் தாக்குதல் நடத்தினார்கள் என்றும் கூறினார்.

விடுதலைப்புலிகளின் விமானங்களை ராடர் கருவிகளும் காட்டியதையடுத்து, விமானப்படையினர் விடுதலைப் புலிகளின் விமானங்களைத்தடுத்துத் தாக்கும் தமது விமானங்களைச் செலுத்தினார்கள் என்றும் எனினும் விடுதலைப் புலிகளின் விமானங்கள் முல்லைத்தீவு பகுதியை நோக்கித் தப்பிச் சென்றுவிட்டதாகவும் இந்த சம்பவத்தில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை மணலாறு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முன்னரங்கு நிலைகள் மீது தமது விமானப்படையினரால் நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினருக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் மணலாறு பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தினரின் பல்குழல் ஆட்டிலறித் தாக்குதல் தளத்தின் மீது தாக்குதல் நடத்தியதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் விமானப்படையால் வீசப்பட்ட குண்டுகள் 223ஆம் பிரிகேட் தலைமையகக் கட்டடம் அமைந் துள்ள தளத்தின்மீது வீழ்ந்து வெடித்தது.

இத் தாக்குதலினால் படையினர் ஒருவர் படுகாயமடைந்ததுடன் கட்டடங்கள் பலவும் சேதமடைந்தன.

வீசப்பட்ட மூன்று குண்டு களில் ஒன்று இலக்கு ஒன்றினை தாக்கியுள்ள போதிலும் அது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை எனபுலிகள்தெரிவித்துள்ளனர். (ச-2,5)

## மடுமாதா ஆலயத்தின்...

அன்னைக்கு பக்தர்கள் மெழுகுதிரி ஏற்றும் இடமும் ஷெல் வீச்சுக் காரணமாக முற்றாக சேதமடைந்திருந்தது என்றும் அவர் மேலும் கூறினார்.

குருக்கள் வெளியேறியபின் விட்டுச் சென்ற பின் பொருட்களை சரிபார்ப்பதற்காக என்னுடன் எடுத்துச் சென்ற விபரப்பட்டியலுடன் பொருட்களை சரிபார்த்தேன். அதன்படி அங்கு சகல பொருட்களும் வைத்த மாதிரியே இருப்பதைக் காணமுடிந்தது என்றார். (ச)

## கட்டுநாயக்கவில்...

இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமாகிய என்.கே. இலங்கக்கோன் தெரிவித்தார்.

ஈரான் ஜனாதிபதி முகமட் அஹமத் நிஜாத் இலங்கைக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதை முன்னிட்டே மேற்படி திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறிய தாவது,

கட்டுநாயக்க விமான நிலையத்தை அண்டிய பிரதேசத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தொடர்ந்தும் தேடுதல் , சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தபோதிலும் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் மேலதிக பொலிஸாரும் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலதிக பாதுகாப்புக்களுக்காக மேலதிக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார். (ச)

## ஜே.வி.பியை இரண்டாக...

சோமவன்ச அமரசிங்கவுடன் தொடர்பு கொண்ட ஜனாதிபதி, விமல் வீரவன்சவின் நீக்கத்தினால் தனக்கே பேரிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் இந்த பிளவுபடுத்தும் திட்டத்தின் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

எனினும் அதற்கு மாறாக கருத்துத் தெரிவித்திருக்கும் சோமவன்ச அமரசிங்க, ஜே.வி.பியை பிளவுபடுத்தியது ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டம் அல்ல என்றும் அதன் பின்னணியில் இருப்பது மகிந்தவும் அவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவுமே என்பதை முழுக் கட்சியுமே அறியும் என்றும் தெரிவித்தார்.

இது ஐக்கிய தேசியக் கட்சியினால் செய்யப்பட்டு வரும் பிரசாரம் மட்டும் என்று கூறிய மகிந்த, எவ்வாறாயினும் விமல் வீரவன்சவை மீண்டும் கட்சியில் இணைத் துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சோமவன்சவிடம் தெரிவித்தார்.

எனினும் அரசாங்க பத்திரிகைகள் மற்றும் தனியார் ஊடகங்கள் சிலவற்றைப் பயன்படுத்தி மகிந்தவும் பசில் ராஜபக்ஷவும் தங்கள் கட்சிக்கு எதிராக சூழ்ச்சிகளை மேற்கொண்டதாக குறிப்பிட்டுள்ள சோமவன்ச அமரசிங்க , இனிமேல் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி மகிந்த விரும்பியவாறு தங்கள் கட்சியை நடத்த முடியாது என்றும் அரச அதிகாரத்தை பயன்படுத்தி தாக்குதல் நடத்தினாலும் அதன் மூலம் தங்கள் கட்சியை அழிக்க முடியாது என்றும்,

தனது கட்சியில் எழுந்துள்ள பிரச்சினைகளை தன்னால் தீர்க்க முடியும் என்றும் மகிந்தவிடம் அவர் தெரிவித்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## ஈரான் ஜனாதிபதி...

மகிந்த ராஜபக்ஷ ஈரானுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது இரு நாடு களுக்குமிடையில் வியாபாரக் கப்பல் ஒப்பந் தம், உமா ஓயா திட்டம், எண்ணெய் சுத்திகரிப்பு வேலைத்திட்டம், ஈரான் இஸ்லாமிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு இடையிலான உறவை மேம்படுத்தல், நிதி மற்றும் இலத்திரனியல் மேம்பாடு உள்ளிட்ட எட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் உமா ஓயா திட்டம், சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பை மேம்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் இவ்வாண்டில் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றன. (ச)


## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம்-சரஸ்வதி



சுன்னாகம் தில்லைகட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் -சரஸ்வதி 27.04.2008 அன்று காலஞ்சென்று விட்டார். அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் -தெய்வானைப்பிள்ளையின் மகளும் கதிரவேலு தங்கம்மாவின் மருமகளும் சீமெந்து தொழிற்சாலை ஊழியர் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவக்கொழுந்து, அரியதுரை, காலஞ்சென்ற இரத்தினதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா, பொற்கொடி மற்றும் தேவிகாராணி, சுந்தரமூர்த்தி, தனலஷ்சுமி ஆகியோரின் மைத்துனியும் தர்சினி, தர்மினி (சுவிஸ்), தர்சன், தர்மஜீவன் ஆகியோரின் பெரியம்மாவும் சகிலா, சசிரேகா, காந்தரூபன், கவிதா, மற்றும் சந்திரதாஸ், பவானந்தன் (சுவிஸ்), யசோதா ஆகியோரின் மாமியும் வைஷ்ணவன், திசோணவன், வரூண், சஞ்ஜெய் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி கிரிகைகள் 28.04.2008 இன்று (திங்கட் கிழமை) 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
சுப்பிரமணியம் (கணவர்)

(1121)



ஐந்தாவது அகவையில் ! மீண்டும் காரைநகரில்

**WIN அக்கடமி**

அல்லின் வீதி, காரைநகர்.

A/L 2010 கலைப்பிரிவு.

தமிழ்:- திரு.காரை.S.கெங்காB.A(Cey)
இந்து நாகரிகம் :- S.ஆதவன் B.A(Cey)

A/L 2009 , 2010 புதிய பிரிவு
ஆரம்பம் :- 02/05/2008 வெள்ளி
மாலை 4.00 மணி

'ஒரே இடம் நிரந்தரம்' 'நிர்வாகி'

(C-1073)



28th Death Anniversary



1929 ❖ 06 ❖ 23
1980 ❖ 04 ❖ 28

**Luther James Selvarajah**

'Oh for the touch of a vanished hand
the sound of a voice that is Still'

Sadly Missed By
Wife -Ranee
Children -Dushan , Janey
Daughter-in -law Thanujah.

'Selva Giri'
57,Arasady Road,
Jaffna.

(1113)


இப்பத்திரிகை வலம்புரி அன்-கோ ஸ்தாபனத்தாரால் இல.?, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.04.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.